கனடாவின் மூத்த தமிழ் இதழ் | விளம்பரம்™ • VLAMBARAM™ | Canada's Oldest Tamil Newspaper




36ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 36 பாலம்: 01 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 01, 2026

# இஸ்லாமிய அரசுப் போராளிகளுக்கு எதிராக அமெரிக்கா தாக்குதல்

நைஜீரியா அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் வடமேற்கு நைஜீரியாவில் ISIS போராளிகளுக்கு எதிராக அமெரிக்கா வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2025 டிசெம்பர் 25இல் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். அதில் அவர் அக்குழு கிறிஸ்தவர்களைக் குறிவைத்துத் தாக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய அரசுப் (IS) போராளிகள் பல அமைப்புகளின் பெயரில் அழைக்கப்படுகின்றனர். ஈராக் மற்றும் லெவண்ட் சார்பு இஸ்லாமிய அரசுப் போராளிகள் 'ISIL' எனவும் ஈராக் மற்றும் சிரியா சார்பு இஸ்லாமிய அரசுப் போராளிகள் 'ISIS' அழைக்கப்படுகின்றனர். இந்த IS போராளிகள் தமக்கு உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம்கள்மீது மத மற்றும் அரசியல் அதிகாரத்தைச் செலுத்தும் உரிமை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இக்கூற்றை எல்லா முஸ்லிம் மதத்தவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வமைப்பு ஐக்கிய நாடுகள் சபையாலும் முஸ்லிம் நாடுகள் உட்பட உலகெங்கிலும் உள்ள பல நாடுகளாலும் ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் இந்த இஸ்லாமிய அரசுப் போராளிகள் குழு 12 மில்லியன் மக்கள் தொகை கொண்ட பல நாடுகளின் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. அப்போது அவர்களிடம் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளும் ஆண்டுக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வரவு செலவுத் திட்டத்தையும் கொண்டு தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தனர். அமெரிக்கா, ஈராக் மற்றும் குர்திஷ் படைகளுடனான மோதலின் பின்னர் 2019ஆம் ஆண்டளவில் இக்குழு மத்திய கிழக்குப் பகுதிகளில் தமது கட்டுப்பாட்டை இழந்து மறைவிடங்களில் பதுங்கியிருந்து தனது பிரசாரங்களிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது. அத்துடன் இக்குழு தற்போது ஆபிரிக்காவின் வடபகுதியில் குறிப்பிடத்தக்க பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

நைஜீரிய அரசாங்கம் பல ஆண்டுகளாக இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களை எதிர்த்துப் போராடி வருகிறது. இதில் குறிப்பிடத்தக்கவை போகோ ஹராம் (Boko Haram) மற்றும் இஸ்லாமிய அரசுப் போராளிகளைச் சேர்ந்த இரண்டு பிரிவுகள். இப்பிரிவுகளில் ஒன்று இஸ்லாமிய அரசு சஹேல் மாகாணம் (ISSP) என்று அழைக்கப்படும். இப்பிரிவினுடைய முந்தைய பெயரான லகுராவா (Lakurawa) என்பது பலருக்குப் பரீட்சயமான பெயர்.


President Donald Trump at Mar-a-Lago club Thanks: Alex Brandon/The Associated Press

இரண்டாவது பிரிவு இஸ்லாமிய அரசு - மேற்கு ஆபிரிக்க மாகாணம் (ISWAP) என்று அழைக்கப்படும்.

இவ்விரண்டு IS குழுக்களும் நைஜீரியா மற்றும் நைஜர் நாடுகளின் எல்லைப் பகுதியில் இயங்கி வருகின்றன. இவை இரண்டும் நைஜீரியாவினுள் ஊடுருவி தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

லகுராவா என்ற அமைப்பு கொள்ளையர்களை எதிர்த்துப் போராடுவதற்காக 2017 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. அப்போது அக்குழுவிற்கு மக்களிடையே மிகவும் வரவேற்பு இருந்தது. நாளடைவில் அவர்கள் தீவிரவாதிகளாகவும், இஸ்லாமிய மதவாதிகளாகவும் மாறி IS அமைப்புடன் சேர்ந்து ISSPஆகத் தம்மை மாற்றிக் கொண்டனர். இவர்கள் இப்போது நைஜீரியாவின் வடமேற்கு எல்லையில் உள்ள சோகோட்டோ (Sokoto) மற்றும் கெப்பி (Kebbi) மாநிலங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர்.

ISWAP என்ற அமைப்பு நைஜீரியாவின் எல்லை நாடுகளான நைஜர் மற்றும் பெனின் (Benin) நாடுகளினது எல்லைப் பிரதேசத்தில் தமது தாக்குதல்களை நடத்திவருகிறது.

நைஜீரியாவில் 2025 நொவெம்பரில் இஸ்லாமிய தீவிரவாதி ஒருவரால் கத்தோலிக்க தேவாலயத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து 303 பாடசாலை சிறுவர்களும் 12 ஆசிரியர்களும் பாபிரி (Papri) என்னும் இடத்தில் உள்ள கத்தோலிக்கப் பாடசாலையில் இருந்து IS குழுவின் ஒரு பிரிவினரால் கடத்தப்பட்டனர். இதற்கு முன்னர் கெப்பி மாநிலத்தில் உள்ள இன்னொரு கத்தோலிக்கப் பாடசாலையில் 25 பாடசாலை மாணவிகள் IS குழுவின் ஒரு பிரிவினரால் கடத்தப்பட்டனர்.

இவற்றைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நைஜீரிய அரசு ISIS பயங்கரவாதிகளுக்கு எதிராகவும், நைஜீரியாவில் நடைபெறும் கிறிஸ்தவர்கள் மீதான வன்முறைக்கு எதிராகவும் ஒரு நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் நைஜீரியாவிற்கான அனைத்து வெளிநாட்டு உதவிகளையும் நிறுத்தப் போவதாக எச்சரித்திருந்தார்.

2025 டிசெம்பர் 25இல் அமெரிக்க அதிபர் அவருடைய சமூகவலைத்தளமான Truth Socialஇல், “இன்றிரவு, நான் அமெரிக்கப் படைகளின் கட்டளைத் தளபதியாக (Commander in Chief) எனது உத்தரவின் பேரில் அமெரிக்கா, வடமேற்கு நைஜீரியாவில் ISIS பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக மிகவும் சக்தி வாய்ந்த பயங்கரத் தாக்குதலை நடத்தியுள்ளது.

அவர்கள் பல ஆண்டுகளாக, ஏன் பல நூற்றாண்டுகளாக இல்லாத அளவில் அப்பாவி கிறிஸ்தவர்களுக்கு எதிராக கொடூரமான தாக்குதல்களை நடத்திக் கொண்டுவருகின்றனர். அமெரிக்கப் பாதுகாப்புப்படை அதிகாரிகள் சரியான, குறிதவறாத தாக்குதல்களை ஏராளமாக நடத்தியுள்ளனர்” எனத் தெரிவித்திருந்தார்.

நைஜீரிய அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றது என அமெரிக்க இராணுவத்தின் ஆபிரிக்கக் கட்டளையகம் (AFRICOM) தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்












# Canada House by CONCORD

## Toronto

Special Deal






- Heart of the Downtown Toronto
- 2 Spectacular Buildings with shared Amenities
- Special 2 year mortgage only 0.1%
- Very Flexible deposit structure
- Price starting as low as $500,000
- Parking & Locker available for Purchase
- Maintenance Fee 0.77$ per Sq.Ft.

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.

ATTENTION REALTORS & HOME BUYERS



Available Till Midnight Including Weekends & Holidays

ANTON DHARMASEELAN
MORTGAGE BROKER
#2 Mortgage Alliance Agent in All of Canada & #1 in GTA

CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| Purchase | Major Banks |
| Refinance | Alternative Lenders |
| Self Employed | B Lenders |
| Bad Credit | Credit Unions |
| Investment Property | Trust Companies |
| Renewal | Private Lenders |

Broker #10530
MORTGAGE ALLIANCE




416 704 1200
anton@myhomemls.ca
Corporate:: #1410-5140 Yonge Street

# அரசாங்கம் மாற்றத்தை ஏற்படுத்தத் திணறுகிறது

## – அரவின் –

அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாற்றத்தை ஏற்படுத்தத் திணறுவது தெளிவாகத் தெரியத் தொடங்கியிருக்கிறது.

நாட்டில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இப்போது கொஞ்சம் கொஞ்சமாக கட்சி அரசியலை அரச நிர்வாகத்துக்குள் புகுத்த ஆரம்பித்திருக்கிறது.

ஆட்சிக்கு வந்த தொடக்கத்தில் இருந்தே இந்த அரசாங்கம், ஒரு கட்சி ஆட்சி முறையை நோக்கி நாட்டை நகர்த்துகிறது என்ற குற்றச்சாட்டுக்கள் வரத் தொடங்கின. இப்பொழுது அரசாங்கத்தின் செயற்பாடுகள் இந்தக் குற்றச்சாட்டுகளை இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

அண்மைய பேரிடருக்குப் பின்னரான சூழலில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் போக்கு கடுமையான விமர்சனங்களுக்குக் காரணமாகியுள்ளது. பேரிடர் நிவாரணப் பணிகளில் தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகளின் தலையீடுகள் மோசமாகி விட்டது.

அரசாங்க நிர்வாக அதிகாரிகளை செயல்பட விடாமல் தடுத்துக்கொண்டு, பிரஜா சக்தி என்ற பெயரில் உருவாக்கப்பட டுள்ள ஆளும்கட்சியின் உள்ளூர் அரசியல்வாதிகளைக்கொண்ட குழுக்கள், ஆதிக்கம் செலுத்துகின்றன.

ஆளும்கட்சியில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்கள் தான் இந்த அமைப்பில் உள்ளனர். இதனால் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், கடும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கையைவிட, அதிகமான வீடுகள் பாதிக்கப்பட்டதாக கணக்குக் காட்டப்பட்டது, நினைவிருக்கலாம். அதற்குப் பிரதான காரணம், ஆளும் கட்சியின் இந்த உள்ளூர் அரசியல்வாதிகளின் தலையீடுதான்.

அவர்கள் கொடுத்த கணக்கின் அடிப்படையில்தான், அரசாங்கத்தினால் அந்தத் தரவு வெளியிடப்பட்டது. அது நாடாளுமன்றத்தில் எதிரொலித்ததை அடுத்து அரசு அதிகாரிகள் நெருக்கடிக்குள் உள்ளானார்கள்.



அரசு அதிகாரிகளை நெருக்கடிக்கு உள்ளாக்கி விட்டு தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகள் தப்பித்துக் கொண்டுள்ளனர். இவ்வாறான நிலை அரச அதிகாரிகளுக்கு மாத்திரமல்ல. பொலிஸ் தரப்புக்கும் அதே கதி தான்.

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவை உங்களுக்கு நினைவிருக்கக் கூடும். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தபோது, சபாநாயகராக நியமிக்கப்பட்ட அவர், 22 நாட்கள் மட்டுமே அந்தப் பதவியில் இருந்தார். அவர் கலாநிதி பட்டம் பெற்றதாக, அரசாங்கப் பதிவேடுகளில் குறிப்பிட்டு இருந்தார். அதன் உண்மைத்தன்மை குறித்து, எதிர்க் கட்சிகள் கேள்வி எழுப்பின.

கலாநிதி பட்டம் பெறாமலேயே அதனைப் பயன்படுத்தி வந்தது மட்டுமல்லாமல், தன்னைப் பேராசிரியர் என்று கூறி, பல போராட்டங்களுக்கும் தலைமை தாங்கி இருந்தார் ரன்வல. ஜப்பானில் கலாநிதி பட்டம் பெற்றதாகக் கூறியிருந்தாலும் அதனை அவரால் நிரூபிக்க முடியவில்லை. இதனால் 22 நாட்களில் சபாநாயகர் பதவி யில் இருந்து விலகினார். ஆனாலும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்கிறார்.

அவர் அண்மையில் ஏற்படுத்திய ஒரு விபத்தினால் ஆறு மாதக் குழந்தையும், தாயும், பேத்தியாரும் காயம் அடைந்தனர். அந்த விபத்தில் அசோக ரன்வலவும் காயமடைந்தார். அவர் ஓட்டிச் சென்ற வாகனமே, விபத்தை ஏற்படுத்தியது.

சட்ட விதிகளின்படி விபத்து நேரிட்டால் உடனடியாக சாரதி மதுசாரம் அருந்தியுள்ளாரா என்பதை அறிந்து கொள்வதற்கான மூச்சுப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். ஆனால் பொலிசார் அதனைச் செய்திருக்கவில்லை. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பது தொடர்பான மருத்துவ அறிக்கைகளும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

கடும் சர்ச்சைகள் எழுந்ததைத் தொடர்ந்து, 24 மணி நேரத்துக்குப் பின்னரே அவரது இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. எனினும், மருத்துவ பரிசோதனை அறிக்கையில் அவர் மது அருந்தி இருக்கவில்லை எனக் கூறப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

ஆனால் அதனை யாரும் நம்பத் தயாராக இல்லை, அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஏற்கனவே இப்படித் தான் அவர் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றதாகக்கூறி, ஏமாற்றி இருந்தார்.

அதைவிட விபத்திற்குப் பின்னர் உடனடியாக அவருக்கு மூச்சுப் பரிசோதனையோ இரத்தப் பரிசோதனையோ மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறான நிலையில் அவர் மது அருந்தியிருந்தாலும், அதனை உறுதிப்படுத்த முடியாது என வாதிடப்படுகிறது. அதுமாத்திரமல்ல, அசோக ரன்வலவிற்கு உதவப் போய் பொலிசாரும்கூட சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கின்றனர்.

பொலிஸ் தரப்பு இப்பொழுது ஆளும் கட்சிக்கு சேவகம் செய்யும் ஒன்றாக மாறி விட்டது என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இந்த விடயத்தில் மாத்திரமல்ல, இரத்தினபுரி மாவட்ட ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார சுபசிங்கவின் உறவினருக்குச் சொந்தமான கஞ்சாத் தோட்டம் ஒன்றை பொலிசார் கண்டுபிடித்த சந்தர்ப்பத்தில்,நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பொலிசாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக கஞ்சாத் தோட்டத்தைக் கண்டுபிடித்த பொலிஸ் அதிகாரி குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அவரது ஆதாரவாளர்களால் தாக்கப்பட்டிருந்தார். இதுபற்றி அவர் முறையிட்ட போதும், எதுவும் நடக்கவில்லை.

கடைசியில் பொலிஸ் கான்ஸ்டபிள், கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கிறார்.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான கஞ்சாத் தோட்டத்தை கண்டுபிடித்ததற்காக, பொலிஸ் அதிகாரி தாக்கப்பட்டிருக்கிறார், பதவியை இழக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இதுதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலை.

கொஞ்சம் கொஞ்சமாக பொலிஸ் தரப்பை அது தங்களுக்கு அடிபணியச் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலையானது, அராஜக ஆட்சியை நோக்கி நாடு நகருகிறது என்று, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா குற்றம் சாட்டியிருக்கிறார். அதேவேளை, கொழும்பில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் தடுப்பூசி போட்டுக் கொண்ட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்தத் தடுப்பூசி இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. அதனை இறக்குமதி செய்தவர், ஆளும்கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாநகரசபை முதல்வர்வராய் கலி பால்தசாரின் சகோதரியின் கணவன் ஆவார்.

இதில் அரசியல் தலையீடுகள் இருப்பதாகவும், போலி மருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. ஏற்கனவே முன்னைய அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக இருந்த ஹெகெலிய ரம்புக்வெல, போலி மருந்து இறக்குமதி தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இப்பொழுது அவர்மீது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெறுகிறது. அதனைக் கடுமையாகச் சாடிய ஜேவிபியின் அரசாங்கத்திலேயே இந்த போலி மருந்து மோசடியும் இடம் பெற்றிருக்கிறது. இந்த மோசடிக்குக் காரணமானவர்களை கண்டுபிடிப்பதற்கோ, கைது செய்வதற்கோ இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஆட்சியாளர்களை திருடர்கள் என்றும் ஊழல் செய்தவர்கள் என்றும் மோசடிக்காரர்கள் என்றும் விமர்சித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியும் அந்த நிலையில்தான் இருக்கிறது என்பதை அண்மைய சம்பவங்கள் ஒவ்வொன்றாக உணர்த்தி வருகின்றன.

முக்கியமான பல உள்ளூராட்சி சபைகளில் ஆளும்கட்சியினால், வரவுசெலவுத் திட்டத்தைக்கூட நிறைவேற்ற முடியவில்லை. கொழும்பு, காலி மாநகர சபைகளின் நிலையும் அவ்வாறே ஏற்பட்டுள்ளது.

பல உள்ளூராட்சி சபைகளில் தொடர்ந்து வரவுசெலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்படுவது பெரும்பான்மை பலம் இல்லாமல் அந்தக் கட்சி உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்துக் கொண்டது என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது. எனினும், இந்த வரவு செலவுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆளுங்கட்சி பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்கிறது.

ஹொரண நகர சபையில் வரவு செலவுத் திட்டம் முதல்முறை தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, இரண்டாவது முறை அதனை நிறைவேற்றுவதற்கு ஆளும்கட்சி குறுக்கு வழியில் முயற்சித்திருக்கிறது.

காலை 10 மணிக்கு சபை கூடுவதாக அறிவித்துவிட்டு, முன்கூட்டியே சபையைக் கூட்டி வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றனர். இதற்காக தேசிய மக்கள் சக்தியின் உள்ளூர் அரசியல்வாதிகள் செய்தது மிக மோசமானது. அவர்கள் ஹொரண நகர சபையின் மண்டபத்தில் இருந்த மணிக்கூட்டின் முள்ளைப் பின்னோக்கித் திருப்பி விட்டு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் போக்கும் செயற்பாடுகளும் கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தத் தொடங்கி இருக்கிறது.

விளம்பரம்
VLAMBARAM™
36ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# இஸ்லாமிய..


01ஆம் பக்கத்தொடர்ச்சி

சோகோட்டோ மாநிலத்தில் உள்ள இரண்டு IS தீவிரவாதிகளின் முகாம்களைக் குறிவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதல்கள் அமெரிக்கக் கடற்படை போர்க்கப்பலான Arleigh Burke வகுப்பு நாசகாரக் கப்பலான USS Paual Lgnatiusமூலம் கினியா வளைகுடாவில் (Gulf of Guinea) இருந்து நடத்தப்பட்டது. இரண்டு IS தீவிரவாதிகளின் முகாம்களைக் குறிவைத்து 16 Tomhawk ஏவுகணைகள் ஏவப்பட்டன. இதில் பல தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என AFRICOM சமூகவலைத்தளம் தெரிவித்துள்ளது.


U.S. Secretary of Defence Pete Hegseth confirmed the U.S. launched strikes on ISIS targets in Syria. Thanks: Alex Wong/Getty Images

அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளர் (Pete Hegseth) தனது சமூகவலைத்தளத்தில் நைஜீரிய அரசாங்கத்தின் ஆதரவிற்கும், ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்தார். அதில் அவர் தாக்குதல் தேவைப்படின் தொடரும் எனவும் தெரிவித்திருந்தார்.


டிசெம்பர் 26ஆம் திகதி காலை துல்லியமான வான்வழித் தாக்குதல்கள் நாட்டின் வடமேற்கில் உள்ள பயங்கரவாத இலக்குகளைத் தாக்கியதாக நைஜீரிய வெளியுறவு அமைச்சகம் செய்தி வெளியிட்டது. அத்துடன் நைஜீரிய வெளியுறவு அமைச்சு அமெரிக்க அரசுடன் தொடர்ந்தும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Thanks: BBC

கிறிஸ்மஸ் தினத் தாக்குதலுக்கு முன்னர் அபுஜா (Abuja நைஜீரிய நாட்டின் தலைநகர்) அமெரிக்காவிற்கு உளவுத் துறை தகவல்களை வழங்கியதாக நைஜீரிய வெளியுறவு அமைச்சர் யூசுப் துக்கர் (Yusuf Tuggar)உள்ளூர் தொலைக்காட்சி "Channels TV"யிடம் தெரிவித்தார்.

அவர் அப்போது தாக்குதல் குறித்து அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோவுடன் (Marco Rubio) தொலைபேசியில் பேசியதாகக் கூறினார். அவர் "நாங்கள் இரண்டுமுறை பேசினோம். தாக்குதலுக்கு முன்பு 19 நிமிடங்கள் பேசினோம். பின்னர் தாக்குதல்


The US defence department posted an unclassified video to show a missile being launched from a military vessel

தொடங்கும் முன்பு மீண்டும் ஐந்து நிமிடங்கள் பேசினோம்" என்று விளக்கி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

நைஜீரியாவின் சனத்தொகை 220 மில்லியன் ஆகும். கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் அண்ணளவாக சமமாகவே இருக்கின்றனர். ஆனால் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் தெற்குப் பகுதியிலும் பெரும்பான்மையான இஸ்லாமியர்கள் வட பகுதியிலும் வாழ்கின்றனர்.


LEADERSHIP Sunday 2.11.25

Iwobi Backs Super Eagles For World Cup Redemption PG 30

N400 | NO. 1,030 | www.leadership.ng NIGERIA'S MOST INFLUENTIAL NEWSPAPER

Leadership Newspapers ...STILL IN SERVICE FOR GOD AND COUNTRY 21 YEARS AFTER!

My Greatest Regret Was Accepting Anti-Corruption Czar Role Under Buhari – Obono Obla Page 17

PDP Infighting Escalates As NWC Splits Over Suspensions Page 7

REPORT RANKS NIGERIA LOWEST, TUNISIA HIGHEST IN LIFE EXPECTANCY IN AFRICA PG 7

BRIEFING: Trending: Trump Labels Nigeria 'Country Of Concern' NUMBERS: Unsold Manufacturing Goods Hit N1.04 Trillion History Today PG 2

**Trump Threatens War On Nigeria To 'Save Christians'**

- Experts explain how U.S president's remarks may affect Nigeria
- President Tinubu says charge does not reflect country's reality PG 4

Abducted Kebbi Deputy Speaker's Whereabouts Unknown

BY KABIR WURMA AND ABDULLAHI FARUK

Suspected bandits with sophisticated weapons have abducted the deputy speaker of the Kebbi State House of Assembly, Hon Sama'ila Mohammed Bagudo, from his residence in Bagudo local government area of the state. The attackers, who reportedly came in large numbers, shot a watchman at the mosque in Bagudo's residence, simply identified as Malam Abubakar, before whisking away the deputy speaker to an unknown destination. PG 2

PG 8 CRIME ARMY DESTROYS BANDITS' CAMPS IN 7 TARABA COMMUNITIES

WHY PDP LOST SOUTHERN KADUNA TO APC – SPEAKER ABBAS PG 7

METRO POLICE KILL 2 HOODLUMS, ARREST 3 SUSPECTED KIDNAPPERS IN EBONYI PG 2

Leadership Sunday Newspaper Thanks: NTA International

சோகோட்டோ மாநிலத்தல் 4 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 80% ஆனோர் இஸ்லாமியர். IS தீவிரவாதக் குழுவினர் கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களையும் தாக்கி வருகின்றனர். இஸ்லாமியச் சட்டத்தின் தீவிர நிலைப்பாட்டை வலியுறுத்தும் இத்தீவிரவாதக் குழுக்கள் இஸ்லாமியர்களை அவர்கள் போதுமான அளவு இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுவது இல்லை எனக்கூறித் தாக்குகின்றனர்.

இதனாலேயே உள்ளூர் தொலைக்காட்சிக்குத் தனது பேட்டியில் நைஜீரிய வெளியுறவு அமைச்சர் யூசுப் துக்கர், "ஆயுதம் ஏந்திய தீவிரவாதிகள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி, எவ்வித மத வேறுபாடும் இல்லாமல் தாக்குகின்றனர்" என்றார்.

நைஜீரிய தகவல் அமைச்சர் முகமது இட்ரிஸ் (Mohammed Idris) சோகோட்டோ மாநிலத்தில் உள்ள, Tangaza பிரதேசத்தில் உள்ள Bauni காடுகளில் இருக்கும். IS தீவிரவாதிகளின் இரண்டு பிரிவினரதும் (ISSP & ISWAP) ஒவ்வொரு முகாம் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இவ்விடத்திலேயே இவ்விரண்டு தீவிரவாதக் குழுக்களும் பெரிய அளவிலான தாக்குதல்களைத் திட்டமிடக் கூடுவார்கள் எனத் தெரிவித்ததாக CNN ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

டிசெம்பர் 13ஆம் திகதி அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளது படைகள்மீது ISIS தீவிரவாதிகளால் சிரியாவில் தாக்கப்பட்டு அமெரிக்க இராணுவ வீரர் இருவரும் ஒரு மொழிபெயர்ப்பாளரும் இறந்தனர். இதற்குப் பதிலளிக்கும் முகமாக அமெரிக்கா சிரியாவில் உள்ள ISIS தீவிரவாதிகளினது உள்கட்டமைப்பு மற்றும் ஆயுதத்தளங்கள் மீது டிசெம்பர் 20ஆம் திகதி பதில் தாக்குதலை நடத்தியது.

டிசெம்பர் 13ஆம் திகதி சிரியாவில் மூன்று அமெரிக்கர் தாக்குதலில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ISIS தீவிரவாதிகள் மீது அமெரிக்கா பதிலடி கொடுக்கும் என அமெரிக்க அதிபர் அப்போது சபதம்


President Donald Trump and Defense Secretary Pete Hegseth salute the remains of Iowa National Guard soldiers at Dover Air Force Base, Del. Thanks: AP Photo/Julia Demaree Nikhinson

செய்திருந்தார். பின்னர் அவர் டிசெம்பர் 20ஆம் திகதி தனது Truth Social சமூக வலைதளத்தில், "நான் உறுதியளித்த படி மூன்று அமெரிக்கர்களின் மரணங்களுக்குப் பொறுப்பான கொலைகாரப் பயங்கரவாதிகள்மீது மிகவும் கடுமையான பழிவாங்கலை எமது இராணுவம் செய்து வருகிறது" எனத் தெரிவித்தார்.

ஜோர்டான் விமானப்படையும் அமெரிக்காவுடன் சேர்ந்து சிரியாவில் இஸ்லாமிய அரசுத் தீவிரவாதக் குழுக்களின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதை ஜோர்டான் உறுதி செய்தது.

ISIS மீண்டும் கட்டமைக்க முயற்சிக்கும் இடங்களைத் தாக்கி அந்தப்படைகளை வேறுத்து, அவர்களின் இருப்பிடங்களை பெரிய அளவில் அழிப்பதே இந்த நடவடிக்கையின் குறிக்கோள் என அமெரிக்கா தெரிவித்தது. அமெரிக்க இராணுவம் இத்தாக்குதலின்போது A-10 மற்றும் F-16 விமானங்கள், அப்பாச்சி உலங்கு வானூர்திகள் மற்றும் HIMARS எனப்படும் Rocket Laucher போன்றவற்றை பயன்படுத்தியது. அதேநேரம் ஜோர்டானின் விமானப்படை F-16 விமானங்களைப் பயன்படுத்தியது.

இத்தாக்குதல்கள் தொடரும் என அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் Pete Hegseth தனது சமூகவலைதளப் பதிவில் இத்தாக்குதல் மூலம் பல எதிரிகளைக் கொன்றுள்ளதாகத் தெரிவித்தார். அவர் அதில் "இது ஒரு போரின் தொடக்கம் அல்ல. ஒரு பழிவாங்கும் நடவடிக்கை" எனவும் தெரிவித்திருந்தார்.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கை



President Trump ordered the US military to prepare for action in Nigeria Thanks: BBC News / AFP via Getty Images

யில், "டிசம்பர் 13ஆம் திகதி சிரியாவின் பல்மைரா (Palmyra) என்னும் இடத்தில் அமெரிக்கப்படைகள்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக ISIS போராளிகளின் உள்கட்டமைப்பு மற்றும் ஆயுதத் தளங்களை அகற்றுவதற்காக அமெரிக்கா, "Operation Hawkeye Strike" நடவடிக்கையை சிரியாவில் மேற்கொள்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.


he U.S. military launched strikes on ISIS targets in Syria. Thanks: ABC News

டிசெம்பர் 20ஆம் திகதி நடைபெற்ற தாக்குதலில் ISIS தீவிரவாதிகளின் 70 இற்கு மேற்பட்ட இலக்குகள் தாக்கி அழிக்கப்பட்டன. 100இற்கு மேற்பட்ட குண்டுகள் பலவிதமான போர் விமானங்களாலும், உலகுவானூர்திகளாலும் மற்றும் ரொக்கட் ப்ரீங்கித் தாக்குதல்களாலும் போடப்பட்டுள்ளன என அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளையகம் (CENTCOM) ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

சிரியாவின் புதிய அரசாங்கம் அமெரிக்காவின் ISIS மீதான தாக்குதலுக்கு முழு ஆதரவையும் தெரிவித்துள்ளதாக அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.



Two U.S. soldiers and one civilian U.S. interpreter were killed by ISIS gunman in Palmyra, Syria

அமெரிக்கப் படைகள்மீது நடத்திய தாக்குதலில் அமெரிக்க இராணுவ வீரர் இருவர் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் கொல்லப்பட்டதுடன் மூன்று அமெரிக்கப் படையினரும் சில சிரிய பாதுகாப்புப் படையினரும் காயமடைந்திருந்தனர். இத்தாக்குதலை நடத்தியவர் சிரிய பாதுகாப்புப் படையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சேர்ந்தவர். அவர் ISIS உளவாளியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் சிரிய பாதுகாப்புப் படை அதிகாரிகள் அவர்மீது விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அதையும் மீறி அவர் இத்தாக்குதலை நடத்தியுள்ளார். தாக்குதலின்போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.



Vlambaram - JANUARY 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-31 7:45 PM Page 6



# தமிழகம் நோக்கித் திரும்பிய ஈழத்தமிழ் அரசியல்

## – முகிலன் –

நீண்டகால உறக்கத்தில் இருந்த தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளின் ஒரு பகுதி, இப்பொழுது யதார்த்தத்தைத் புரிந்து கொள்ளத் தொடங்கி இருக்கிறது.

தமிழ்த் தேசிய பேரவையின் தமிழகப் பயணத்தை அதன் ஓர் அம்சமாகவே குறிப்பிட வேண்டும்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையில், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள், தமிழ்த் தேசிய பேரவை என்ற பெயரில் ஒரு புரிந்துணர்வு உடன் பாட்டைச் செய்துகொண்டு, கூட்டாகப் போட்டியிட்டிருந்தன.

அந்த அணியைச் சேர்ந்த, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்களும், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசனும், அண்மையில் தமிழகத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அவர்களின் இந்தப் பயணத்தின் பிரதான நோக்கம் தமிழக அரசியல் கட்சிகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது.

அத்துடன், இலங்கை அரசாங்கம் ஒற்றை யாட்சி அரசியலமைப்பு ஒன்றை உருவாக் கும் முயற்சியில் இறங்கியுள்ள சூழலில், அதனை நிராகரித்து சமஷ்டி அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு, அழுத்தம் கொடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துவதும் இன்னொரு நோக்கம்.

இந்தப் பயணத்தின்போது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, பாமக நிறுவுநர் ராமதாஸ், பாமக தலைவர் அன்புமணி, நாம் தமிழர் கட்சி யின் ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழர் வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல் முருகன், பாஜக தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி களின் மாநிலத் தலைவர்களையும், சந்தித்து பேச்சு நடத்தி இருந்தனர்.

அண்மைக்காலத்தில் அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விஜய், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பழ.நெடுமாறன் போன்றவர் களையோ அவர்கள் சந்திக்கவில்லை. வைகோவும், நெடுமாறனும் இவர்களின் சந்திப்பிற்கான கோரிக்கையை நிராகரித்து விட்டதாக சொல்லப்படுகிறது.

தமிழகத்தில் விரைவில் சட்டமன்றத்



தேர்தல்கள் நடக்கவுள்ள சூழலில், இந்தப் பயணம் திட்டமிடப்பட்டதால், எல்லோரை யும் சந்திக்க முடியாத நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாது.

எவ்வாறாயினும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழக அரசியல் கட்சிகளுடன் ஒரு சுற்றுச் சந்திப்பை நடத்தி இருக்கின்றனர். தமது எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தி இருக்கின்றனர். தமிழகத் தின் ஆதரவையும் அனுசரணையையும் கோரி இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ்த் தேசிய அரசியல் குழப்பமான சூழலுக்குள் தள்ளப்பட்டது. எந்த அணிக்குள் எப்படி நிற்பது என்று தெரியாத சூழல் தாயகத்தில் மாத்திர மல்ல, தமிழகத்திலும் காணப்பட்டது.

ஜெயலலிதா- கருணாநிதி என்ற இரண்டு துருவங்களுக்கு இடையில், பயணிப்பதில் இருந்த சிக்கலான சூழலும் இதற்கு ஒரு காரணம்.

அதைவிட, இறுதிக்கட்டப் போரின்போது, திமுக அல்லது கருணாநிதி தமிழரைக் காப்பாற்றத் தவறிவிட்டதான ஒரு குற்றச் சாட்டும் இந்த இடைவெளி ஏற்படக் காரணம். இப்படிப் பல காரணங்களால், தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழக அரசியல் தலைமைகள் மற்றும் கட்சிகளுடன் நெருங்கிய உறவாடல்களைத் தவிர்த்து வந்தன.

தமிழகத்துக்குப் பயணம் செய்து வந்த போதும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் தமிழக அரசியல் தலைவர் களைச் சந்திப்பதில்லை, அவர்களுடன் பேசுவதில்லை, அவர்களிடம் பிரச்சினை களைக் கூறி ஆதரவு கேட்பதில்லை. இந்த நிலை கடந்த ஒன்றரை தசாப்தங் களுக்கு மேலாக நீடித்து வந்தது.

இறுதிக்கட்டப் போருக்கு பின்னர் தமிழகத்தில் ஈழத்தமிழர் ஆதரவு நிலைப் பாடு வலுப்பெற்றிருந்தபோதும், அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய திறன் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இருந்திருக்கவில்லை. இந்த நிலையை மாற்றுவதற்கு முற்பட்டு தமிழ் தேசிய பேரவை முதல் சுற்று சந்திப்பை நடத்தி முடித்திருக்கிறது.

வைகோ, நெடுமாறன் போன்ற தலைவர் கள் இந்தத் தரப்பினரைச் சந்திக்க மறுத்திருக்கின்றனர். அதற்குக் கூறப் பட்டிருக்கின்ற பிரதான காரணம், தமிழ்த் தேசிய பேரவை முன் வைத்திருக்கின்ற அரசியல் நிலைப்பாடு தான்.

இலங்கை அரசாங்கம் ஒற்றையாட்சி அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கத் தயாராகி வருகின்ற சூழலில், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் சமஷ்டி முறை யிலான அரசியல் தீர்வு ஒன்றுக்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்ப தற்கும் தமிழ் தேசிய பேரவை தமிழக அரசியல் கட்சிகளிடம் ஆதரவு கோரி யிருக்கிறது.

தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு, சமஷ்டிக் கோரிக்கையை வலி யுறுத்துவதை, விரும்பாத நிலையிலேயே வைகோ, நெடுமாறன் போன்ற தரப்புகள் இவர்களை சந்திக்கவில்லை எனக் கூறப் படுகிறது. அவர்களின் இந்த நிலைப் பாட்டுக்குப் பின்னால் புலம்பெயர் தமிழர் சிலரே இருப்பதான குற்றச்சாட்டுகளும் முன்வைக் கப்பட்டிருக்கின்றன. அதில் உண்மை இல்லாமல் இல்லை.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் தனி நாட்டு கோரிக்கையை முன்வைத்து தேர்தல்களில் போட்டியிட்டிருக்கவில்லை. அவை சமஷ்டிக் கோரிக்கைகளை முன் வைத்தே, தேர்தலில் மக்கள் ஆணையை பெற்றிருக்கின்றனர். அந்த உண்மை வைகோ, நெடுமாறன் போன்ற தலைவர் களுக்குப் புரியாமல் இருப்பது ஆச்சரியம்.

தனிநாட்டு கோரிக்கை, பொதுவாக்கெடுப்பு போன்ற விடயங்கள் நடைமுறைச் சாத்திய மா என்று இவர்கள் சிந்திக்கவில்லை.

இலங்கையின் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ளது. அது எத்தகைய ஒரு கொடிய அரசியலமைப்பையும் கொண்டு வந்து நிறைவேற்றக் கூடிய அசுர பலத்துடன் இருக்கிறது. இந்தச் சூழலில் அவர்கள் ஓர் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைக் கொண்டுவந்து அதனையே தமிழருக்கான தீர்வாகத் திணிப்பதற்கு முற்படுவதை இந்தத் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இந்த ஆபத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரு வழியாகவே, சமஷ்டி முறையிலான அரசியலமைப்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இதனை வலியுறுத்துவதற்காக, இதற்கு ஆதரவு தேடுவதற்காக தமிழகத்தைத் தேடிச் சென்றபோதே, ஈழத் தமிழர் ஆதரவு தலைவர்களான வைகோ, நெடுமாறன் போன்றவர்கள் அவர்களை உதாசீனம் செய்திருக்கின்றனர்.

தமிழ் மக்களின் சார்பில் தீர்மானங்களை எடுப்பவர்களாக இவர்கள் இருக்க முடியாது. இந்த உண்மை அவர்களுக்கு புரியவில்லை. அப்படியானால், திமுகவுடன் வைகோ கூட்டு வைத்துக் கொண்டதை, வசைபாடியது சரியென்றாகி விடும்.

ஈழத் தமிழருக்குத் தேவையானது, தமிழீழமா சமஷ்டியா என்பதை ஈழத் தமிழர்தான் தீர்மானிக்க வேண்டும். அந்த உரிமையை பிறரிடம் விட்டுக் கொடுக்க முடியாது. ஆனால், அவர்கள் நீண்ட காலம் ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுத்தவர்கள், அதற்காகக் கடும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டவர்கள்.

அந்த வகையில் அவர்கள் மீதான அனு தாபத்தை ஒருபோதும் மறக்க முடியாது. ஆனால் தற்போதைய சூழலில் நடை முறைச்சாத்தியமான வகையில் ஈழத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு ஒன்றை எட்டுவதே முக்கியம். அதற்கான வழியைத் தேடி தமிழகத்தை நோக்கி தமிழ்த் தேசிய பேரவை நகர்ந்திருப்பது ஆக்கபூர்வமானது.

தமிழகத்துடன் இணைந்து செயற்படுவ தால், தமிழர் பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும் என்று மிகையாகக் கற்பனை செய்யக் கூடாது. தமிழகம் என்ற ஒரு வலுவான பின்புலச் சக்தி தமிழருக்கு பின்னால் இருக்கிறது என்ற செய்தியே முக்கியமானது. அதுவே இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கும். அந்தப் பக்க பலமே இன்று ஈழத் தமிழருக்கு அதிகம் தேவைப்படுகிறது.

*Get in touch for your perfect home!*

**PUSHPA KANAGARAJAH**
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



Vlambaram - JANUARY 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-31 7:45 PM Page 7



# வைகோவின் அரசியல் எழுச்சியும் வீழ்ச்சியும்

## நேர்காணல் – கே.எஸ். ராதாகிருஷ்ணன் · நேர்கண்டவர் – கண்ணன்

தமிழ்நாடு அரசியலில் கருத்தியலுக்காகவும் வாக்குவாதங்களுக்காகவும் எதிர்ப்புக் குரலுக்காகவும் தனித்த அடையாளம் கொண்ட தலைவராக அறியப்பட்டவர் வைகோ என்கிற வை. கோபால்சாமி. திராவிட இயக்க மரபிலிருந்து உருவெடுத்து, தேசிய அரசியலிலும் தன்னைப் பதிவு செய்தவர். ஆனால், அவரது அரசியல் பயணம் இப்போது கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இந்த வீழ்ச்சிக்கு என்ன காரணம்? வைகோ அரசியலை நெருக்கமாகக் கண்டும் நேரடியாகப் பங்கெடுத்தும் வந்த மூத்த அரசியலாளர் கே.எஸ். ராதாகிருஷ்ணன் வழங்கும் இந்த நேர்காணல், வைகோவின் அரசியல் வாழ்க்கையை ஒரு வரலாற்றுப் பார்வையில் அணுகுகிறது. மதிமுக உருவான தருணம் முதல், வைகோவின் தனிநபர் அரசியல் பாணி, கூட்டணி அரசியலில் அவர் எடுத்த முடிவுகள், தேசிய அரசியலில் அவருக்குக் கிடைத்த வாய்ப்புகளும் தவறிய தருணங்களும் – இவை அனைத்தையும் கே.எஸ்.ஆர். கூர்மையான விமர்சனத்துடன், பலருக்கும் தெரியாத பின்னணித் தகவல்களோடு இந்தப் பேட்டியில் பகிர்கிறார். தமிழ்நாடு அரசியலைப் புரிந்துகொள்ள விரும்பும் வாசகர்களுக்கு, இந்த நேர்காணல் முக்கியமான ஓர் அரசியல் ஆவணம்.

**கேள்வி:** வணக்கம். தமிழ்நாடு அரசியலில் கருணாநிதி, ஜெயலலிதா காலகட்டங்களில் அவர்களுக்கு அடுத்த தலைமுறையில் ஒரு பெரும் தலைவராக வர வாய்ப்பு உள்ளவர் என்று கருதப்பட்டவர் வைகோ. 1990களில் தமிழக இளைஞர்கள் அவர் மேல் நிறைய நம்பிக்கை வைத்திருந்தனர். அவ்வளவு பெரும் தலைவராக எதிர்பார்க்கப்பட்ட வைகோ, இன்றைக்கு யாரை எதிர்த்து அரசியல் தொடங்கினாரோ அதே மு.க. ஸ்டாலினிடம் சேரும் நிலைக்கு வீழ்ச்சி அடைந்திருக்கிறார். இவ்வீழ்ச்சிக்கு அவர் ஒவ்வொரு காலகட்டங்களில், குறிப்பாக தேர்தலில் எடுத்த கூட்டணி அரசியல் முடிவுகள் ஒரு முக்கியமான காரணமாக பார்க்கப்படுகிறது. உதாரணமாக மதிமுகவின் முதல் சட்டசபை, நாடாளுமன்றத் தேர்தல் 1996. அதில், மதிமுக தலைமையில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத நிலைமையில் 98இல் அதிமுக கூட்டணியில் போட்டியிட்டீர்கள். அப்புறம் 99இல் திமுக கூட்டணிக்கு வந்தீர்கள். 99இல் இருந்து திமுக கூட்டணியில் இருந்த நிலைமையில் 2001இல் திடீரென்று திமுக கூட்டணியில் இருந்து விலகி மீண்டும் தனியாகப் போட்டியிட்டு எல்லாத் தொகுதிகளிலும் தோல்வி அடைகிற நிலை ஏற்பட்டது. அப்போது என்ன நடந்ததென்று சொல்ல முடியுமா?

**பதில்:** 2001 சட்டமன்றத் தேர்தலில் 21 சீட்டென்று முடிவாகி வைகோவும் கலைஞரும் கையெழுத்துப் போட்டுவிட்டனர். பிறகு இரண்டு நாள் கழித்து திமுக கூட்டணியில் இருந்து வெட்டிட்டுப் போனார், வைகோ. அன்றைக்கு 21 அல்லது 22 இடங்கள் பெற்று 15 இடங்கள் வெற்றி பெற்றிருந்தோம்னா இன்றைக்குச் சீமானோ விஜயகாந்தோ வந்திருக்க மாட்டார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் அப்படித்தான் செய்து வந்தார்.



மதிமுக கட்சியைத் தொடங்கி, வழிநடத்தி, அதன் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட தலைவர்களில் நானும் ஒருவன். பொன் முத்துராமலிங்கம், மு. கண்ணப்பன், எல். கணேசன், செஞ்சி ராமச்சந்திரன், மலர் மன்னன், திருச்சி செல்வராஜ், வேதாரண்யம் மீனாட்சி சுந்தரம், கன்னியாகுமரி ரத்தின ராஜ், திருப்பூர் துரைசாமி, நான், தங்க வேலு, புதுக்கோட்டை சந்திரசேகர், குடியரசு எல்லோரும் இருந்தோம். தமிழ் நாட்டிலேயே கட்சி அமைப்பில் சாதிக்கு ஒரு பதவி கொடுக்க வேண்டுமென்று போட்டது வைகோ காலத்தில்தான். திமுகவில் அப்போது இல்லை. அதிமுகவில் எம்ஜிஆர் காலத்தில் எல்லாரும் இருந்தனர். மதிமுகவில் வைகோதான் ரெட்டியாருக்கு ஒன்று, கோனாருக்கு ஒன்று, முக்குளத்தோருக்கு ஒன்று, நாயுடுவுக்கு ஒன்று, அவருக்கு ஒன்று, இவருக்கு ஒன்று என்று கொடுத்தார். அது தவறு. அப்போது நாங்கள் எதிர்த்தோம். இப்படி தொடக்கத்தில் இருந்தே தவறான முடிவுகள், தவறான அணுகுமுறைகள்;

நீங்கள் கேட்ட கேள்விக்கு வருகிறேன். திமுகவில் வைகோவுக்கு 1993 ஒக்ரோபர் பிரச்சினை வருகிறது. பிறகு 94இல் நீக்கப்படுகிறார். அடுத்து 96; சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் சேர்ந்து வருகிறது. அப்போது மதிமுக வேகமாக வளர்ந்து வந்தது. எனவே 96 தேர்தலில் மதிமுக நிச்சயமாக ஒரு கணக்கைத் தொடங்கும் என்று எல்லாரும் பேசினர். நாடாளுமன்றம், சட்டமன்றம் போவார்கள் என்று சொன்னார்கள்.


கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் தொடங்கியது. சென்னையில் பாம்குரோ விடுதியில் ஒரு சூட் போட்டுப் பாட்டாளி மக்கள் கட்சியுடன் கூட்டணிக்கு வாழப்பாடியும் நானும் ஏற்பாடு செய்தோம். வைகோ எக்மோர் குரு விடுதியில் தங்கி இருந்தார். அங்கு தான் அறை போட்டுத் தேர்தல் பணிகள் எல்லாம் பார்த்தோம். கடைசியில் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணி பேச்சுவார்த்தைக்கு வைகோ வரவில்லை. “நான் முதலமைச்சரென்று சொல்லச் சொல்லுங்கள்” என்று ஒரு கருத்தைச் சொன்னார். அதுவும் சொல்லியாயிற்று. வாழப்பாடி எவ்வளவோ முயற்சி பண்ணினார். ஆனாலும் அது வைகோ நடத்தையால் தோல்வியில் முடிந்தது.

இதற்கிடையில் அன்றைய இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், காங்கிரஸ் கட்சி ஜெயலலிதா உடன் கூட்டணி என்று அறிவித்தார். அப்போது குமரி ஆனந்தன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர். மூப்பனார் இந்தக் கூட்டணி பிடிக்காமல் காங்கிரஸிலிருந்து வெளியேறித் தமாகா தொடங்கினார். அப்ப தமாகா உடன் சேர்வோம், அங்க பேச்சு வார்த்தையைத் தொடங்குவோமென்று சொன்னோம்.அதை வைகோ கேட்கவில்லை. திமுக கூட்டணியில் தமாகா சேர்ந்தனர். சிபிஐயும் திமுக கூட்டணிக்குப் போய்விட்டனர். சிபிஎம் எங்கள் கூட இருந்தனர். சிபிஐ பாலன் இல்லத்துக்கு ஒரு மாலைப் பொழுதில் நானும் கண்ணப்பனும் போய்ப் பேச்சு வார்த்தை தொடங்கினோம். ஆனால், எங்கள் கூட பேச்சு வார்த்தையைப் பேசிக் கொண்டு இருக்கும்போதே அவர்கள் திமுக கூடப் போய்விட்டனர். இப்படியாக மதிமுக தலைமையில் ஒரு வலுவான கூட்டணி அமைக்கக்கூடிய சூழ்நிலை இருந்தும் அது நடக்கவில்லை. மதிமுக, சிபிஎம், ஜனதா தளம் - இந்த மூன்று கட்சி கூட்டணிதான் அமைந்தது.

ஜெயலலிதா எதிர்ப்பு அலை காரணமாக, திமுகவோடு சேராத சோ, அந்தத் தேர்தலில் திமுகவோடு சேர்ந்தார். சோ முயற்சியால் ரஜினிகாந்த் அந்தக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். அன்றைக்கு ரஜினிகாந்த் வாய்ஸ் கொடுக்கவில்லை, திமுக தலைமையில் இவ்வளவு பெரிய கூட்டணி அமையாமல் இருந்திருந்தால் மதிமுக ஓரளவு வெற்றி பெற்றிருக்கும். வைகோ கொஞ்சம் இறங்கி வந்து எல்லார்கிட்டயும் பேசி இருந்தால் ஒரு கூட்டணி அமைந்து சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் போயிருக்கலாம். இந்த அளவு அழிவு வந்திருக்காது.

அந்தத் தேர்தலில் சிபிஎம் மணி மட்டும் தான் எங்கள் கூட்டணியில் வெற்றி பெற்றார். மற்ற எல்லாரும் தோற்று விட்டோம். மதிமுக 180 இடத்தில் போட்டிப் போட்டோம். அதில் 5 பேர்தான் வைப்புத் தொகை திரும்ப வாங்கினோம். விளாத்திகுளத்தில் வைகோ, கோவில் பெட்டியில் நான், சங்கரன்கோவிலில் தங்கவேல், வேதாரண்யம் மீனாட்சி சுந்தரம் வாங்கினோம். எம்ஜிஆர் காலத்தில் துணை சபா நாயகராக இருந்த வேடசுந்தர் பாலசுப்பிரமணியம், எங்கள் ஆதரவில் நின்றார். அவரும் வைப்புத்தொகை வாங்கினார். அப்போது மதிமுகவில் அதிக ஓட்டு வாங்கினது நான்தான். 33000 ஓட்டு. ஆனால், அதனால்த்தானோ என்னமோ, அதற்குப் பிறகு எனக்கு வாய்ப்பே தரப்படவில்லை.

1996 தோல்வியால் எங்கள் குடை



சின்னம், கட்சி அங்கீகாரத்தை இழந்தோம். அப்போது 10, 15 இடங்கள் வெற்றி பெற்றிருந்தால் இன்றைக்குப் பெரிய கட்சியாக வளர்ந்திருக்கும். அப்போது ஒரு சில விடயங்கள், நான் சொன்னதையெல்லாம் வைகோ கேட்கவில்லை.

**கேள்வி:** அப்போது நீங்கள் என்ன ஆலோசனை சொன்னீர்கள்?

**பதில்:** ‘நாம் பாமக, தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ப்போம். வலுவான கூட்டணிதான் அமைக்கவேண்டும். அப்படி அமைத்தால்த்தான், ஜெயலலிதா எதிர்ப்பு அலையால் திமுகவுக்குப் போகிற வாக்குகளை ஓரளவு நாம் வாங்கலாம். வைகோ என்கிற பெரிய தலைவர் வருகிறார் என்று தமிழ்நாட்டில் ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறது’ என்று சொன்னேன்.

இன்றைக்கு இளைய சமுதாயம் எல்லாமே விஜய் கூட இருக்கின்றனர் இல்லையா, இதைவிடப் பன்மடங்கு பக்குவப்பட்ட கூட்டம் அன்று வைகோ பின்னாடி நின்றது. திருச்சியில் நாங்கள் நடத்தின மாநாடு மாதிரி யாரும் நடத்த முடியாது. அதே மாதிரி கடற்கரை பேரணி, அதன் கடைசி செங்கல்பட்டில் இருந்தது. அதிகாலை 5, 6 மணிக்குத்தான் வைகோ பேசினார். அதுவரை கூட்டம் கலையவில்லை. அப்படி செல்வாக்குப் பெற்ற இயக்கமாக இருந்தது இன்றைக்கு இந்த நிலைமைக்கு ஆகிவிட்டது. இதற்கு காரணம் வைகோதான்.

நாங்கள் எல்லாரும் அவருக்காக வேலை பார்த்து எங்கள் இளமைக் காலத்தை இழந்தோம். வழக்கறிஞர் பணி, ஐநா சபை வேலை வாய்ப்பு எல்லாவற்றையும் விட்டுவிட்டு வைகோ பின்னால் சென்றேன். தேர்தல் செலவுகளுக்காக என் சொத்துகளை இழந்தேன். என்னைப்போல் பல ஆயிரம் பேர், எவ்வளவு பேரின் அரசியல் கனவுகளைச் சிதைத்துவிட்டார்.

**கேள்வி:** 1996 தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ், அதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்த ரஜினி, இவர்களுடன் மதிமுக கூட்டணி அமைத்திருந்தால், அதன்பிறகான தமிழ்நாடு அரசியல் வரலாறே வேறு மாதிரி ஆகியிருக்கலாம். ஏன் அந்தக் கூட்டணி அமையாமல் போய்விட்டது?

**பதில்:** தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் பேசிகிட்டு இருக்கும்போதே அதை வைகோ சுலபமாக எடுத்துவிட்டார். கொஞ்சம் நெருக்கடி கொடுத்துப் பேசிப் பார்ப்போம் என்று நாங்கள் எல்லாம் சொன்னோம். கேட்கவில்லை. தொடரும்

# நாமும் நமது இல்லமும் 692



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

**அனைவருக்கும் ஆங்கில 2026 புதுவருட நல்வாழ்த்துகள் வாழ்க வளமுடன்**

ஆதன வியாபாரம் மற்றும் விலை கடந்த நான்கு (4) வருடங்களாக, குறிப்பாக 2022, 2023, 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளில் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. விளம்பரம் பத்திரிகை (www.vlambaram.com) ஒன்லைனில் (online) வாசிப்பவர்கள் இதனை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

2022இல் ஆரம்பித்த வட்டிவீத அதிகரிப்பினைத் தொடர்ந்து ஆதன விலை இறக்கம் ஏற்பட்டது .

## கனடிய மத்திய வங்கியின் தொடர்ச்சியான பத்து தடவை வட்டிவீதம் அதிகரிப்பு

வட்டிவீதம் அதிகரிப்பிற்கு முக்கிய காரணியாக பணவீக்க அதிகரிப்பே கூறப்பட்டது.

ஒரு கட்டத்தில் கனடியப் பணவீக்கம் 8.1% ஆக அதிகரித்திருந்தது. கொரோனா பெருந்தொற்றிற்குப் பிற்பாடு சரித்திரத்தில் காணாத மிகக்குறைந்தளவிலான கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.25% இற்குக் குறைக்கப்பட்டது. இதனாலேயே பணவீக்கம் அதிகரித்ததாகக் கூறப்பட்டது. கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.25% மற்றும் 0.5% என தொடர்ந்து அதிகரிக்கப்பட்டது. 2023இல் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 5% என்ற உச்சத்தை அடைந்தது (யூலை 12,2023). இந்தக் காலகட்டத்தில் ஆதன விலையிலும், வியாபாரத்திலும் தேக்கம் ஏற்படத் தொடங்கியது.



தொடர்ந்து அதிகரித்து வந்த வட்டிவீதம் யூன் 06,2024இலிருந்து சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டது. இந்நிலைமை 2025இன் இறுதிவரை (ஒக்ரோபர் 29,2025) நிகழ்ந்தது. இன்றைய நிலையில் கனயடி மத்திய வங்கியின் வட்டி வீதம் 2.25% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ் வட்டி வீதம் சிறப்பானது என பொருளாதார ஆய்வாளர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

வட்டி வீதம் குறைந்த போதிலும் ஆதனத்தில் முதலீட்டாளர்கள் முதலிடுவதில் ஆர்வம் காட்டவில்லை. முதல் தடவையாக (First Time Buyers) ஆதனம் வாங்குவோர் மிகவும் நிதானமாகச் செயல் படுவதினால் ஆதன விலையிலும் வியாபாரத்திலும் சிறப்பான மாற்றத்தைக் காணமுடியவில்லை. இந்நிலைமை 2026 இன் (குறைந்தது) நடுப்பகுதிவரை எதிர்பார்க்கலாம். அரசியல், பொருளாதார நிலைமைகளால் ஆதன வியாபாரத்தில் மேலும் மந்த நிலை தொடர்ந்தாலும், ஆச்சரியப்படத் தேவையில்லை. எனினும், முதல் தடவை ஆதனம் வாங்குவோருக்கு சிறந்த காலம் என்பது எனது எண்ணம்.

இவ்வாறான ஆதன விலை இறக்கத்தை 1989 ஒகஸ்ரில் தொடங்கி, 1998இன் இறுதி காலப்பகுதிவரை காணக்கூடியதாக இருந்தது. 1989இல் ஆதனம் அதிகூடிய விலையை அடைந்திருந்தது. 1998இல் அதிகுறைந்த விலையை அடைந்திருந்தது. அதன் பிற்பாடு தொடர்ச்சியாக விலை அதிகரிப்பு ஏற்பட்டது. எனினும், 2008/2009, 2016/2017, 2020/2021 (கொரோனா காலம்) விலை இறக்கம் சிறிது காலம் ஏற்பட்ட போதிலும், குறுகிய காலத்தில் ஆதனத்தின் விலை மீண்டும் ஏறத் தொடங்கியது.

1989இன் நிலைமையைப் போலவே 2022ஆம் ஆண்டின் ஆதன விலை இறங்கத் தொடங்கியது. (இன்றைய நிலைமை 2022 - 2025)

1989உடன் இன்றைய நிலைமையை ஓரளவு ஒப்பிடலாம். எனவே முதல் தடவை ஆதனம் வாங்குவோர் சிறந்த ஆதன முகவருடன் இதனைப்பற்றி ஆலோசிப்பது சிறப்பாகலாம். அத்துடன் ஆதனம் வாங்குவதைப் பற்றி ஆழமாக சிந்திக்கலாம்.

ஆதன விலையை ஒப்பிடும்போது பொதுவாக மூன்று விதமான ஆதன விலையைத் தெரிந்திருந்தால், ஆதன விலை மாற்றத்தை அறிவது சுலபமாகும்.
1) சராசாரி விலை (Average Price)
2) மத்திய விலை (Median Price)
3) அடிப்படைவிலை (Benchmark Price)

1) சராசாரி விலை என்பது, குறிப்பிட்ட அனைத்து விற்பனைகளாலும் ஏற்பட்ட மொத்த தொகையை விற்கப்பட்டு/வாங்கிய மொத்த ஆதனங்களின் எண்ணிக்கையால் வகுப்பதால் வருவதாகும்.

(குறிப்பிட்ட பகுதியில் அதிக விலை அல்லது மிகக்குறைந்த விலையில் ஆதனங்கள் விற்கப்பட்டு இருந்தால், சராசரி விலை தவறான எண்ணத்தை உருவாக்கலாம்.

2) மத்திய விலை என்பது விற்கப்பட்ட அனைத்து விலைகளையும் குறைந்த விலையிலிருந்து அதிக விலைக்கு ஒழுங்குபடுத்தும்போது நடுவில் (Middle) வரும் விலையே மத்திய விலையாகக் கொள்ளப்படும்.

3) அடிப்படை விலை என்பது ஒரு குறிப்பிட்டபகுதியில் உள்ள ஒரு சாதாரண அல்லது மாதிரி ஆதனத்தின் பெறுமதியை (மதிப்பை) கணக்கிடப்பட்ட விலை ஆகும். இது Housing Price Index (HPI)

| Province | Benchmark Price | Dollar Change | % Change |
|---|---|---|---|
| Ontario | $777,800 | -$52,400 | -6.30% |
| B.C | $929,800 | -$24,200 | -2.50% |
| PEI | $366,600 | -$9,200 | -2.40% |
| Alberta | $507,000 | -$1,600 | -0.30% |
| Manitoba | $408,500 | $10,500 | 2.60% |
| Quebec | $535,200 | $23,200 | 4.50% |

அடிப்படையின் முறையில் கணக்கிடப்படுகின்றது. இப்பெறுமதி, குறிப்பிட்ட பகுதியில் உள்ள வீடுகளின் அளவு, இடம், வசதிகள், கட்டப்பட்ட ஆண்டு போன்றவற்றை வைத்து நிர்ணயிக்கப்படுகின்றது.

மேலே உள்ள முறைகளில் இதுவே சிறப்பானதாகும். இந்த முறையால் ஆதன சந்தையின் விலையை நியாயமாக புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அடுக்குமனை அலகு (Condo. Units), தொடர் வீடுகள் (Attached Houses), தனி வீடுகள் (Detached Houses) போன்ற வெவ்வேறான ஆதனங்களின் நியாயமான விலையை கண்டுபிடிக்க இதுவே சிறப்பான முறை.


பொதுவாக உங்கள் பகுதியில் உள்ள ஆதன வாரியங்கள் (Real Estate Board) இந்தத் தகவல்களை மாதாந்திர ரீதியில் வெளியிடுகின்றன.

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS
சமூக உளவளம் பேணும் தொடர் - 107
Psychosocial Educational Series-107
VASANTHAM HEALTH & WELLNESS CENTRE

5 January 2026 (Monday)
Canada EST: 7:00pm - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

திருமந்திரம் கூறும் நல்வாழ்வுக்கான மூச்சுப் பயிற்சிகள்



Dr. Sundar Balasubramanian
Cell Biology Researcher, Founder of PranaScience Institute

ஒவ்வொரு முதலாம் மூன்றாம் திங்கட்கிழமைகளில் எங்களுடைய ஷூம் தொடரில் இணைந்துகொள்ளுங்கள்

Join us via zoom: CLICK HERE or go to link below in the email



Hosted by Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340 .9490 / 416.732.2228



Mr.S.F.Xavier
(Teacher)

# தமிழர் தம் பண்பாட்டில் பேச்சுக்கலையும் அதன் உலகமயமாதலும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## 10. தொலைக்காட்சிகளில் பேச்சரங்கம்

நவீன வெகுசனத் தொடர்பாடல் ஊடகங்களில் தொலைக்காட்சி சேவைகள் முக்கியமானவை. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஒளிபரப்பு மூலங்கள் (Channels) காணப்படுகின்றன. சமகாலத்தில் கோடிக்கணக்கான பார்வையாளர்களைக் கொண்டுள்ளன. காலம் கடந்தும் ஒளிபரப்புக்களைப் பார்க்க முடியும், பல மொழிகளிலும் பார்க்கும் வசதிகளும் உள்ளன.

தமிழ்மொழி மூலம் ஒளிபரப்பும் பல தொலைக்காட்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. முப்பது நாடுகளில் தமிழர் பரவி வாழ்கின்றனர்.

தமிழகத்தில் ஏழுகோடிபேர் வாழ்கின்றனர். விஜய் ரிவி, சன் ரிவி, ஜீ தமிழ், இலங்கையில் சக்தி ரிவி, டான் ரிவி, கப்பிற்றல் ரிவி போன்ற பலவும் தமிழில் ஒளிபரப்புகின்றன. மொழி, பண்பாடு, அரசியல் எல்லாம் இதில் பேசப்படுகிறது.

ஏராளமான பேச்சரங்கங்கள் அதிக பார்வையாளர்களைக் கவர்ந்து வருகின்றன. மேடைப்பேச்சை விடவும் அதிக தாக்கத்தை இவை ஏற்படுத்துவதற்கு தொழில்நுட்ப நவீனத்துவம் துணை செய்கிறது.

விஜய் ரிவியில் நீயா, நானா? நிகழ்ச்சி அதிக ஆதிக்கம் செலுத்தும் பேச்சரங்கமாகும். பலரைப் பேச வைக்கிறது. பொது உரையாடல் கலாசாரத்தை ஊக்குவிக்கிறது.

பண்பாட்டு முரண்பாடுகளை முன் வைத்து கருத்துருவாக்கம் செய்கிறது. நகர - கிராமிய பண்பாட்டு முரண்கள் பற்றிய தெளிவான பொதுமக்கள் உரையாடல் மூலம் உருவாக்குகின்றது.

புலம்பெயர் பண்பாடு பற்றிய பேச்சரங்குகள் பல்முனைப்பட்ட உரையாடல்களை ஊக்குவிக்கின்றது.

தொழில் உலகில் ஆண் - பெண் அணுகுமுறைகள் பற்றிய உரையாடல்கள் முக்கியத்துவம் உடையன.



நெறிப்படுத்தும் கோபிநாத் மிகவும் திறமையும், மொழிவளமும், தர்க்க சிந்தனையும், சமநிலை பேணும் ஆற்றலும் கொண்டவர். தமிழ்மொழி உரையாடலுக்குப் புதிய மதிப்பை உருவாக்கியவர் கோபிநாத்.

கோபிநாத் பேச்சாளர்களது நோக்கங்களையும் போக்குகளையும் கட்டமைக்கிறார். கேட்டவர்களது உணர்விலும், பகுத்தறிவிலும் அதிக பாதிப்பை அவரால் ஏற்படுத்த முடிகிறது. பங்குபற்றுநர்கள் கவனமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். கவன ஈர்ப்புக்குரிய பிரபலங்கள் பலர் கலந்துகொண்டு ரசனையை அதிகரிப்பதுண்டு. சமகால சமுதாய, கல்வி, பண்பாட்டுப் பிரச்சினைகளையும், புதிதாக முனைப்பும் பெறுகின்ற சமுதாய நெருக்கடிகள் பற்றியும் பேசுவதில் இந்த பேச்சரங்குகள் அதீதகவனம் செலுத்துகின்றன. பங்குபற்றுநருக்கு வெகுமதிகளும் வழங்கப்படுகின்றன. வணிக உலகின் விளம்பர ஆதரவு பேச்சரங்கங்கள் தொடர்வதற்கு உதவுகின்றது.

ஜீ தமிழ் ரிவியில் ஆவுடையப்பன் நெறிப்படுத்தும் 'தமிழா தமிழா' பேச்சரங்கம் இத்தகையதே. சன் ரிவி போன்று பல்வேறு ரிவிக்களும் அரசியல் பிரச்சினைகள் பற்றிய விவாத அரங்குகளை நடத்துவதுண்டு. பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் ஆதரவுக்குரல் கொடுக்கும் வகையில் ஏராளமான பேச்சரங்குகள் நடைபெறுகின்றன. பொது மக்களுக்கு அரசியல் பற்றிய புதிய எண்ணங்களையும், புதிய முடிவுகளையும் கட்டமைப்பதில் இந்தப் பேச்சரங்குகள் பெரிய பங்களிப்பை வழங்கி வருகின்றன. யாழ்ப்பாணத்தில் டான் தொலைக்காட்சியும் கல்வி கற்ற இளைஞர்கள் குறிப்பாக, விரிவுரையாளர்கள், மேடைப் பேச்சாளர்கள், பிரபலம் விரும்பும் இளைஞர்கள் போன்றோர் மையப்படுத்திய பேச்சரங்குகள் அதிகம் நிகழ்வதுண்டு. படிப்படியான வளர்ச்சி தென்படுகின்றது. இவை வளர வேண்டிய தூரம் அதிகமுள்ளது. சக்தி ரிவியின் அரசியல்வாதிகளது நேர் காணல்கள் பிரபல்யமான கேட்போர் தொகுதியை வளர்த்து வருகின்றன.

## 11. புலம்பெயர் தமிழர் கோவில்களும், பிரசங்கங்களும்

யுத்தம் முடிந்த பின்னர் புலம்பெயர்ந்து பொருளாதாரச் செழிப்புடன் வாழ்கின்ற சிலர் புதிய கோவில்களையும், அறநிலைப் பாடசாலைகளையும் தொடக்கிப் பிரபல்யப் படுத்தி வருகின்றனர். ஒரு காலத்தில் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் மலேஷியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் கோவில்களையும், ஆரம்பப் பாடசாலைகளையும் தொடக்கி சமூக மட்டத்தில் நல்நம்பிக்கையையும் அதன்வழி தமது பொருளாதார முயற்சிகளையும் விரிவுபடுத்திக் கொண்டனர். அதனை முன் மாதிரியாகக் கொண்டு ஈழத்தமிழரில் சிலர் கோவில் மைய முதலீட்டாளர்களாகி வருகின்றனர். இங்கு சமயப் பேச்சுக்கள், பண்பாட்டுப் பேச்சுக்கள் சான்றோர்களால் அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன. தாம் வாழும் வெளிநாடுகளிலிருந்து விடுப்பில் சென்று தாயகத்தில் தங்கியிருந்து கோவில் மைய பண்பாட்டுப் பேச்சரங்கங்கள் பரவலாக இடம்பெறுகின்றன. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளிலிருந்து பலர் இத்தகைய முயற்சிகளில் அதிகம் ஈடுபடுகின்றனர். இந்தியாவிலிருந்து பூசகர்கள் வரவழைக்கப்படுகின்றனர். பங்குபற்றும் பக்தர்களுக்கு உணவு வழங்கும் பண்பாடும் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றை மையப்படுத்திய புதிய வகையான பிரசங்கிமார்களும் வளரத் தொடங்கியுள்ளனர். பண்பாடு, முதலீடு, பேச்சரங்கு என்பன ஒன்றிணைந்து வளர்ந்து வருவது புதிய வகை முன்னேற்றமாகும். புலம்பெயராது தாயகத்தில் தொடர்ந்து வாழ்கின்ற எளிய மக்களை இலவச உணவைக்காட்டி கட்டாயப் பேச்சரங்க நலிவுற்ற கேட்ப வராக்கி-சபையோராக்கி வருகின்ற னரோ என்ற சந்தேகம் பலரிடம் இப்போது எழுந்துள்ளது. கோவில் - பேச்சரங்கு - இலவச உணவு - எளிமையான கேட்போர் என்ற தொடர் ஒழுக்கமும் பண்பாடும் வளர்ந்து வருவதும் சிந்திக்கத்தக்கது.

## ஒவ்வொரு சுவாசத்தையும் கொண்டாடுங்கள்

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

நம் வாழ்வில் மூச்சின் வருகை நிபந்தனைக்கு உட்பட்டதல்ல. ஒவ்வொரு நாளும் தொடர்ந்து எதுவித முன் அறிவித்தலும் இன்றி தானாக நடைபெறுகிறது. நாம் நல்லவர்களாக இருந்தாலும் சரி கெட்டவர்களாக இருந்தாலும் சரி சுவாசம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

நாம் அதைபற்றிச் சிந்திக்காமல் இருக்கும் போதும் சிந்திக்கும்போதும் சுவாசம் இடைவிடாது நடைபெறுகிறது.

உங்களுக்கும் எனக்கும் அதைவிடப் பெறுமதியானது வேறு எதுவும் இல்லை. எவ்வளவு பணம் கொடுத்தும் சுவாசிக்கும் ஆற்றலை நம்மால் வாங்கமுடியாது என்பதனால் அது நம்மை செல்வந்தர் ஆக்குகிறது. விலை மதிக்கவே முடியாத ஒன்று நம்மிடம் இருக்கிறது.

ஒவ்வொரு மூச்சுடனும் நம் வாழ்கையின் ஆனந்தத்தைக் கொண்டாடுவதற்குப் பதிலாக நாம் கவலையில் மூழ்கி ஆனந்தத்தை இழந்துவிட நேரிடலாம். தெளிவைக்கொண்டு வாருங்கள். மீண்டும் ஒருமுறை வாழ்கை நம்மை அரவணைப்பது போல் நாமும் வாழ்கையை அரவணைக்கத் தொடங்கலாம்.






# யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# நானிலம் போற்றும் நட்பு - 80



– அகணி –
authorakani@gmail.com




அன்பான வாசகர்களே!
உங்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளவற்றில் ஒன்றான ஐந்திணை ஐம்பது நூலில் உள்ள முல்லை நிலப் பாடல்கள் சிலவற்றில் உள்ள நட்புப் பற்றிய கருத்துகளை உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையைத் துணையாகக்கொண்டு கவனிப்போம். இந்நூல் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற ஐந்திணைக்கும் பத்துப் பாடல்களைப் பெற்றுள்ளமையால் 'ஐந்திணை ஐம்பது' எனப் பெயர் பெற்றது. இந்த நூலின் ஆசிரியர் மாறன் பொறையனார்.

இப்பொழுது பாடல் 2இனைக் கவனிப்போம்.

"அணி நிற மஞ்ஞை அகவ, இரங்கி,
மணி நிற மா மலைமேல் தாழ்ந்து, - பணிமொழி! -
கார் நீரமை கொண்ட கலி வானம் காண்தொறும்,
பீர் நீரமை கொண்டன, தோள்".

அணி நிற என்பது அழகிய என்றும், மஞ்ஞை என்பது மயில் என்றும், கலி என்பது ஆரவாரம் என்றும், நீரமை என்பது தன்மை என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர்.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "மென்மையான சொற்களைப் பேசும் தோழியே! அழகிய மயில்கள் கூவியழைக்கும்படி இடித்து முழங்கிப் பெரிய மலைகளில் படிந்து மழைபெய்யும்போல் காணப்பட்ட கார்மேகத்தை நான் காணும்போது ஆற்றாமை மிகுந்து என் தோள்கள் பீர்க்கம்பூ நிறத்தில் பசலை பெற்று விளங்கின" என்று தலைவி தோழியிடம் கூறினாள். இந்தப் பாடலில் தோழியிடம் தலைவி தனது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்.

இப்பொழுது பாடல் 3இனைக் கவனிப்போம்.

"மின்னும், முழக்கும், இடியும், மற்று இன்ன
கொலைப் படை சாலப் பரப்பிய, - முல்லை
முகை வென்ற பல்லினாய்! - இல்லையோ, மற்று
நமர் சென்ற நாட்டுள் இக் கார்?".

முகை என்பது மொட்டு என்றும், நமர் என்பது நம்மவர் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர்.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "தலைவியே! மின்னலும், இடியும், இடியின் முழக்கமும் இவைபோன்ற இன்ன பிறவுமாகிய பிரிந்தாரைக் கொல்லும் படைக்கலங்கள் மிகுதியாகப் பரப்புவதற்கு இல்லாமல் போய்விட்டதோ? முல்லைப் பூவினை வென்ற பற்களை உடைய பெண்ணே! நம்முடைய தலைவன் சென்ற நாட்டில் இக்கார்காலம் இல்லையோ?" என்று குறிப்பாகக் கேட்கிறாள்.

இப்பொழுது பாடல் 4இனைக் கவனிப்போம்.

"உள்ளார்கொல் காதலர் - ஒண்தொடி! - நம் திறம்?
வள் வார் முரசின் குரல்போல் இடித்து உரறி,
நல்லார் மனம் கவரத் தோன்றி, பணிமொழியைக்
கொல்வாங்குக் கூர்ந்தது, இக் கார்".

உள்ளுதல் என்பது நினைத்தல் என்றும், தொடி என்பது வளையல் என்றும் கூர்தல் என்பது மிகுதல் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர்.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "ஒளிமிக்க அழகிய வளையல் அணிந்த தலைவியே! இந்த மேகக் கூட்டமானது தோல்வாரினால் கட்டப்பட்ட முரசின் ஒலியைப் போன்று இடியினை வீழ்த்தி முழங்கித் தலைவரைப் பிரிந்த நங்கையரின் உள்ளம் வேறுபடுமாறு தோன்றித் தலைவரால் நமக்குக் கூறப்பட்ட இன்சொற்களைச் சிதைப்பது போன்று மிகுந்து காணப்படுகின்றது. நம் காதலர் நம்மியல்பை நினைத்துப் பார்க்க மாட்டாரோ? நிச்சயம் நினைப்பார். ஆதலின் இன்றே வருவார்" என்று கார்ப்பருவம் கண்டு வருந்திய தலைவியைத் தோழி தேற்றினாள்.

இப்பொழுது பாடல் 5இனைக் கவனிப்போம்.

"கோடு உயர் தோற்ற மலைமேல் இருங் கொண்மூக்
கூடி நிரந்து தலை பிணங்கி, ஓடி,
வளி கலந்து, வந்து உறைக்கும் வானம் காண்தோறும்,
துளி கலந்து வீழ்தரும், கண்".

கோடு என்பது சிகரம் என்றும், கொண்மூ என்பது மேகம் என்றும் வளி என்பது காற்று என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "என் இனிய தோழியே! உயர்ந்த சிகரங்களோடு கூடிய மலைகளின் மீது பெரிய மேகக் கூட்டங்கள் திரண்டு ஒன்று கூடி, ஒன்றோடொன்று மோதி, காற்றோடு கலந்து மழைபொழியத் துடிக்கும்படியான, வானத்தைக் காணும் பொழுதெல்லாம் என் கண்கள் கண்ணீர்த் துளிகளைத் துளிர்விக்கும்" என்று தலைவி தனது கவலையைப் பகிர்கின்றாள்.

இப்பொழுது பாடல் 7இனைக் கவனிப்போம்.

"தேரோன் மலை மறைந்த செக்கர் கொள் புன் மாலை
ஊர் ஆன்பின் ஆயன் உவந்து ஊதும், சீர்சால்,
சிறு குழல் ஓசை, - செறிதொடி! - வேல் கொண்டு
எறிவது போலும் எனக்கு".

ஆன் என்பது பசு என்றும், தொடி என்பது வளையல் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "கைகளில் நிறைந்த வளையல்களைக் கொண்டுள்ள தோழியே, ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வந்த கதிரவன் மாலையில் மேற்குத் திசையில் மறைந்த காலத்து சிவந்ததாய்க் காணப்படும் மாலைப்பொழுதில் அருமையான பசுக்கூட்டங்களின் பின்னால் வரும் இடையன் மகிழ்ச்சியோடு ஊதுகின்ற சிறு குழலின் இனிய ஓசையானது எனக்கு வேல் கொண்டு தாக்குவதுபோல் மிகுந்த துன்பத்தைத் தருகின்றது" என்று தலைவியிடம் தனது துன்பத்தை வெளிக்காட்டுகின்றாள்.

> "The most valuable antiques are dear old friends."
> – H. Jackson Brown. Jr. -

இப்பொழுது பாடல் 8இனைக் கவனிப்போம்.
"பிரிந்தவர் மேனிபோல் புல்லென்ற வள்ளி,
பொருந்தினர் மேனிபோல், பொற்ப, - திருந்திழாய்! -
வானம் பொழியவும் வாரார்கொல், இன்னாத
கானம் கடந்து சென்றார்?

வள்ளி என்பது கொடி என்றும், பொற்ப என்பது பொலிய என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "அழகிய அணிகலன்களை அணிந்துள்ள தலைவியே! காதலரைப் பிரிந்த காதலியரின் வடிவம் போலப் பொலிவின்றிக் காணப்பட்ட கொடிகள் மீண்டும் காதலரோடு கூடிவாழும் காதலியரின் வடிவம்போலப் பொலிவு பெறும்படி மழை பொழிதலைக் கண்டும் துன்பத்தைத் தருகின்ற காடுகளையெல்லாம் கடந்து பிரிந்து சென்ற நம் காதலர் வரமாட்டாரா? விரைவில் வருவார் வருந்தாதே" என்று தோழி தலைவியைத் தேற்றினாள்.

இப்பொழுது பாடல் 9இனைக் கவனிப்போம்.

"வருவர் - வயங்கிழாய்! - வாள் ஒண் கண் நீர் கொண்டு,
உருகி, உடன்று அழிய வேண்டா! தெரிதியேல்,
பைங்கொடி முல்லை அவிழ் அரும்பு ஈன்றன,
வம்ப மழை உரறக் கேட்டு".

இழை என்பது அணிகலன் என்றும், வம்ப என்பது புதுமை என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "அழகிய அணிகலன்களை அணிந்துள்ள தலைவியே! ஆராய்ந்து பார்ப்பின் காலமல்லாத காலத்தில் புதிதாகத் தோன்றிய மேகங்கள் கூடி முழங்கக் கேட்ட முல்லைக் கொடிகள் அரும்புகளைத் தோற்றுவித்தன என்பது தெரியவரும். ஆகவே நம் தலைவர் கார்ப்பருவம் வரும்போது தவறாது வந்து சேர்வர். ஆதலின் கண்களில் நீர் பெருகத் துன்புற்று அழிய வேண்டா" என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறினாள்.

இப்பொழுது பாடல் 13இனைக் கவனிப்போம்.

"கானக நாடன் கலவான் என் தோள்" என்று, -
மான் அமர் கண்ணாய்! - மயங்கல் நீ! நானம்
கலந்து இழியும் நல் மலைமேல் வால் அருவி ஆட,
புலம்பும் அகன்று நில்லா!"

நானம் என்பது கத்தூரி மணம் என்றும், வால் என்பது தூய்மை என்றும் உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "மான் போன்று மருளும் கண்களையுடைய தோழியே! காடுகள் சூழ்ந்த மலைநாட்டுத் தலைவன், இற்செறிப்பில் இருக்கும் என் தோள்களில் தழுவான் என்று நினைத்து நீ வருந்த வேண்டா! நம் தலைவனது நாட்டைச் சேர்ந்த நன்மலையிலிருந்து வீழ்கின்ற அருவியில் நாம் நீராடினால் தலைவனைச் சேராமையால் உண்டாகும் துன்பங்கள் எல்லாம் நில்லாது நீங்கும்" என்று இற்செறிப்புற்ற தலைவி தோழியிடம் கூறினாள்.

இன்று எடுத்துக் கொண்ட ஐந்திணை ஐம்பது பாடல்களில் தலைவியை தோழி ஆற்றுப்படுத்தலும், தலைவி தனது உணர்வுகளையும் கவலையையும் தோழியிடம் பகிர்ந்து கொள்வதலும் கூறப்பட்டுள்ளது. ஐந்திணை ஐம்பது என்ற நூலில் உள்ள பெரும்பாலான பாடல்கள் நட்பின் பெருமைகளுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# கைலாய நாதனையே காணலாமே!

**பெரி – முத்துராமன்**

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## பகுதி 5:

ஒகஸ்ற் 13: மூன்று நாள் மலை வலம் (பரிக்ரமா) இன்று துவங்கியது. புறப்படும் இடம் வரை, ஜீப்பில் சென்றோம். ஜீப்பில் இருந்து இறங்கி, சிறிது தூரம் நடந்து, எமதுவார் என்று அழைக்கப்படும் எமனுக்கான சிறு கோயிலை அணுகினோம். அனைவரும் எமனை அந்த இடத்தில் வணங்கி, பயணத்தைத் துவங்குகின்றனர். நாங்களும் அவ்வாறே செய்தோம்.

எமனிடமும், சிவனிடமும், “மூவேழ் சுற்றம் முறணுறு நரகிடை ஆழாமே அருள வேண்டும்,” என்று பிராத்தித்தோம்.

முதல் நாள் 12 கிலோமீற்றர் குதிரையில் பயணித்து, தீராபுக் என்ற அடிவார ஊரை அடைந்தோம். குதிரையில் பயணித்தாலும், பயணம் சிரமமாகத்தான் இருந்தது.

எங்கள் குழுவில் இருந்த எட்டுப் பேரில், நான் என் மனைவி உட்பட நான்கு பேர் குதிரையில் பயணித்தோம். மற்ற நால்வரும் நடந்தனர். தீராபுக்கில் கயிலை நாதர் இரவில் வெள்ளி மேனியனாகவும், விடிகாலையில் பொன்னார் மேனியனாகவும் திகழ்ந்தார். சிவ சொந்தங்கள் உள்ளிட்ட உறவுகளுக்கும், மற்றவர்களுக்கும் இயன்றவரை வீடியோவில் இந்தக் காட்சிகளைக் காட்டினோம். பெட்டி போன்ற அறைகளில், அறைக்கு நாலு பேர் வீதம் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திறந்த வெளி மற்றும் பொது கழிப்பிட வசதி இங்கே இருந்தது.

ஒகஸ்ற் 14: எங்கள் குழுவைச் சார்ந்த நடந்து வந்த நால்வரில், இருவர் முதல் நாள் பயணத்துக்குப் பிறகு தொடர்ந்து பயணிக்க இயலாது என்று ஜீப் மூலம் டார்சன் அடிவார நகர் ஒட்டலுக்குத் திரும்பினர். மற்ற இருவரும் காலை ஏழு மணிக்கு நடக்கத் துவங்கினர். குதிரையில் சென்ற நாலு பேரும் சுமார் 8 மணி அளவில் இரண்டாவது நாள் பயணத்தை ஆரம்பித்தோம். இந்தப் பயணத்தின் முதல் முடிவு 5,630 மீற்றர் (18,471 அடி) உயர டோல்மா பாஸ் என்ற மலைச் சிகரமே ஆகும். தூரம் 12 கிலோமீற்றர். செங்குத்தான கூர்மையான பாதை. பல இடங்களில் ஒத்தையடி பாதையும்கூட. ஆனாலும் அங்கே மனிதர்களும் குதிரைகளும் ஓர் ஒழுங்கு முறையில் சென்றனர். தடுமாறினால் பல்லாயிரம் அடி ஆழமுள்ள பள்ளத்தில் முக்தி நிச்சயம். இங்கே கௌரி குண்ட் (குளம்) மற்றும் லட்சுமி குபேரகுண்ட் (குளம்) ஆகியவற்றையும் பார்த்தோம். இங்குதான் பார்வதிதேவி, விநாயகரைக் காவல் வைத்துக் குளித்ததாகச் சொல்லப்படுகிறது. அதுபோல லட்சுமி குபேர் குண்டில், லட்சுமி மற்றும் குபேரன் வாழ்வதாக நம்பப்படுகிறது.

டோல்மா லா பாஸை நாங்கள் வந்தடைந்தபோது நேரம் சுமார் மதியம் 12. குதிரைக்காரன் குதிரையிலிருந்து எனக்கு சரியான சப்போர்ட் கொடுக்காமல் இறக்கியதில், நான் தடுமாறிக் கீழே விழுந்து விட்டேன். கடும் வலி வேதனை. இப்போது அனைவருமே பல்லாயிரம் அடி சரிவான செங்குத்தான மலை இறக்கத்தில் 4 கிலோமீற்றர் தூரம்வரை நடந்தாக வேண்டும். இந்த இடத்தில் நடப்பது தவிர வேறு வழி இல்லை. குதிரைகள் செல்லாது.

குதிரைக்காரனும், மற்றவர்களும், “நட நட” என்று என்னை நடக்க அவசரப்படுத்தினர். நான் எதையும் பொருட்படுத்தாது, வலியில், “சிவனே” என்று இருந்தேன். சற்று நேரத்தில் எங்கள் திபேத்திய வழிகாட்டி வர, அவர் ஒருபுறம் என்னைத் தாங்க, மறுபுறம் குதிரைக்காரன் தாங்க, மீண்டும் மெது மெதுவாக நடக்க ஆரம்பித்தேன். 10 அடிக்கு ஒரு முறை ஒய்வு கொண்டேன். பிராண வாயு போதவில்லை. மூச்சுத் திணறியது.



ஏறாத மலைதனிலே ஏறி நின்று தத்தளிக்க..... என் நிலை அறிந்து, என்னைத் தூக்கிச் செல்வதாக, திபேத்திய வழிகாட்டி கூறினார். அவரைவிட நான் எடை அதிகம். எப்படி முடியும் என்றேன்? முயற்சிக்கிறேன் என்று சொல்லி முயற்சித்து தோல்வி அடைந்தார். நான் தான் சொன்னேன். “வாருங்கள் மெது மெதுவாக நடந்து வருகிறேன்” என்று கூறி நடக்க ஆரம்பித்தேன்.

அப்போது திபேத்திய இளைஞர் ஒருவர், என் அருகில் வந்தார். நடிகரைப் போன்று, மாடர்னாக உடை அணிந்து, கலர் கண்ணாடியும் அணிந்திருந்தார். என்னைப் பார்த்து ஆங்கிலத்தில், தூக்கிச் செல்வதாகச் சொன்னார். எப்படிச் சாத்தியம் என்று திபேத்திய வழிகாட்டியை பார்த்தேன். அவர், “ஏறுங்கள் நம்மவர் தான் (He is our person) என்றார்.

சரி என்று சம்மதித்து, அவர் முதுகில் உப்பு மூட்டையாக மாறினேன். என் கால்களையும் கைகளையும் அவரைச் சுற்றி இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளச் சொன்னார். பிறகு செங்குத்தான இறக்கத்தில், அவர்போல் இருமடங்கு எடை கொண்ட என்னை, அனாயசமாகக் தூக்கி 50 படி தூரம் கீழ் இறங்கி சற்று சமமான பாதைக்கு வந்தார். உட்கார்ந்து வந்த எனக்கு களைப்பாக இருந்தது. இறக்கி விடச் சொல்லிக் கேட்டேன். இறக்கி விட்டார். ஐந்து நிமிடம் ஓய்வு கொண்டிருப்பேன். “செல்ல வேண்டிய தூரம் அதிகம் ஏறிக்கொள்ளுங்கள் போகலாம்.” என்றார். மீண்டும் அவர் முதுகில் ஏறினேன். இன்னும் ஒரு செங்குத்தான 50 படிகளை சிரமமின்றி என்னைச் சுமந்து கடந்தார். மீண்டும் ஓய்வு வேண்டும் என்றேன். இறக்கி விட்டார். அவர் என்னைச் சுமந்த நேரம் எல்லாம், அவருக்காகப் பிரார்த்தித்தேன். மனதில் பயம் என்பது சற்றும் இல்லை.

ஒவ்வொரு முறையும் இறங்கியவுடன், கண்களை நேருக்கு நேராகப் பார்த்து நன்றி தெரிவித்தேன். ஊடுருவிய பார்வை. கண்களில் ஒரு காந்தம் இருந்தது. மீண்டும் சுமக்கத் தயாரானார். நான் நடப்பதாகக் கூறினேன். சிரமம் இருந்தால் உதவ வேண்டினேன். சம்மதித்தார். சற்று தூரம் எங்களுடன் வந்து, பிறகு கண்ணுக்குப்புலப்படவில்லை. அவர் எங்கே என்று திபேத்திய வழிகாட்டியைக் கேட்டேன். அவர் உன்னை மீண்டும் தூக்க நீ சம்மதிக்கவில்லை. அதனால் அவர் போய்விட்டார் என்றார். “அடடா” என்றேன். அவரை மீண்டும் சந்திப்போமா என்று கேட்டேன். “சந்திக்க மாட்டோம். He is a stranger” என்று பதிலளித்தார்.

வந்தது யார்? என்னிடம் ஏன் எதையும் எதிர்பார்க்கவில்லை? அவருக்காக நாம் ஒன்றும் செய்யவில்லையே என்று மனம் வருந்தியது. கண்களில் நீர், வெள்ளமென கரை புரண்டது.

**அண்ட வானரும், பிறரும் நின் மலரடி காணா.. மன்ன! என்னை ஓர் வார்த்தையுள் படுத்து பற்றினாய். பதையேன். மனம் மிக உருகேன். பரிகிலேன். பரியா உடல் தன்னைச் செற்றிலேன். இன்னும் திரி தருகின்றேன்.**

**யாரொடு நோகேன்? ஆர்க்கெடுத்து உரைக்கேன்? ஆண்ட நீ அருளிலை ஆனால் வார்கடல் உலகில் வாழ்கிலேன்**
**கண்டாய் “வருக” என்று அருள் புரியாயே!**
**நானார்? அடி அணைவான்? ஒரு நாய்க்கு தவிசிட்டு இங்கு, உடல் புகுந்தான். உயிர் கலந்தான். உளம் பிரியான். தேனார் சடை முடியான். திருப்பெருந்துறை உறைவான். வானோர்களும் அறியாததோர் வளம் ஈந்தனன் எனக்கே.**

இதன்பின்னர் பலத்த இடி மின்னலுடன் மழை பொழிந்தது. மழையில் நனைந்து, ஓய்வுகொண்டு, மெது மெதுவாக நடந்தேன். என்னுடன் நேபாள மற்றும் திபெத்திய வழிகாட்டிகள் உடன் இருந்தனர். அந்த மழையின்போது, வழியில் சில இடங்களில் லேசான நிலச்சரிவும் நிகழக் கண்டோம். கற்கள், பாறைகள் உருண்டன.

என் மனைவியும் குதிரையில் வந்த எங்கள் குழுவைச் சேர்ந்த மற்ற இருவரும் மதியம் இரண்டரை மணி அளவில், சுதூள்புக் என்ற அடிவார இடத்தை அடைந்து, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். மழை பெய்தபோது என் நலம் வேண்டி பிராத்தித்ததாகக் கூறினர். நிறைவாக, நான் சுதூள்புக்கை அடைந்தபோது, நேரம் மாலை 6:30.

ஒரு மணி நேர ஓய்வுக்குபின், மீதமிருந்த இரண்டாவது நாள் பயணத்தையும், மூன்றாவது நாள் பயணத்தையும் ஜீப்பில் பயணிக்க முடியும் என்றனர். அவ்வாறு பல மணி நேரம் ஜீப்பில் பயணித்து, இரவு டார்சன் அடிவார நகர் ஓட்டலுக்கு வந்து சேர்ந்தோம். வெந்நீர் குளியலுக்குப் பிறகு ஓர் ஆழ்ந்த உறக்கம் எங்களை ஆட்கொண்டது.

தொடரும்...



Vlambaram - JANUARY 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-31 7:45 PM Page 12



## BASEMENT FOR RENT

**SALEM & GILLETT DR. (AJAX)**
2 Bedrooms brand new 9 Ft. Ceiling bsmt for rent. Sep. entrance, Large living room & 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.964.0625**

**BIRCHMOUNT & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to TTC, School & all facilities. No Pets. Avail. Feb. 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.529.3267**

**MCCOWAN & ELSON**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & 1 Parking. 5 Min. to school, Parks, bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.559.0612**

**MARKHAM & DENISON**
4 Bedrooms bsmt for rent. Sep. entrance & 2 Parking. Close to Costco, bus stop & all facilities. Avail. immediately.
**647.721.3611/647.703.4738**

**MCCOWAN & 14TH AVENUE**
1 Bedrooms basements for rent. Sep. entrance & parking. Close to bus stop, School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.295.8648**

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, laundry & 1parking. Close to TTC. Small family / student preferred. Avail. immediately.
**416.857.4338 / 647.332.1580**

**WARDEN & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. in front of bus stop. Close to Costco & all facilties. Avail. immediately.
**416.757.8278/647.856.9868**

**MCCOWAN & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 par king. No smoking & no pets. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.703.8916**

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. 3 Min. walk to Steeles. Students/ Bachelors preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.3279**

36ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**FINCH & TAPSCOTT**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC, Mall & all facilities. Couple /small family preferred. Avail. Feb. 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.726.4186**

**BRIMLEY & EGLINTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Rooms also available for rent. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193/ 416.892.7762**

**LAWRENCE & BELLAMY**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Family preferred. Avail. Feb. 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.464.4207**

**VICTORIA PARK & FINCH**
2 Bedrooms walkout bsmt apartment for rent. 1 parking & laundry. Close to bus stop. No pets & No smoking. Avail.immediately.
**647.979.3476/ 416.991.7593**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. No parking. Couple/ 2 people Preferred. Close to GTA mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.358.5843**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to TTC, YRT & Srilankan Grocery store. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom walkout bsmt for rent. Close to all facilities. No parking. Working Couple / 2 Girls only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.534.4129**

**VICTORIA PARK & LAWRENCE**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. Sep. washroom. Ladies only. Avail. Feb. 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.831.3784**

## BASEMENT FOR RENT

**BOX GROVE & COPPER CREEK**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 2 parking & internet. Close to school, bank, walmart & Longos. Avail. March 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.827.1636**

**MIDDLEFIELD & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC, School & Shopping mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.609.5031**

**BRIMLEY & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to YRT, Plaza, high school & elementary school. Avail. March 01, 2026.
தொடர்புகளுக்கு: **647.298.3993**

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Very close to TTC. 5 Min. walk to New spiceland. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.299.9355**

**MARKHAM & DENISON**
1Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

**14TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to YRT Costco, Spiceland & all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.525.2316**

**ST. CLAIR & BIRCHMOUNT**
1 Large bedroom walkout bsmt for rent. 1 parking. Close to Warden subway, shopping mall & all facilties. No pet & no smoking
தொடர்புகளுக்கு: **647.234.7590**

**BRIMLEY & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to bus stop & all facilities. No pets & No Smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.3159**

## BASEMENT FOR RENT

**SCAR.GOLF CLUB&ELLESMERE**
2 Bedrooms for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & internet. Family/Female preferred. Avail. immediately.
**647.802.1599 / 647.963.2397**

**CHURCH & ROSSLAND - AJAX**
Very spacious 1 bedroom walk out bsmt apartment for rent. Sep. entrance & 1 parking. Close to public Transit, School & HWY 401.
**Pls. Call Rajah: 416.917.0557**

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to TTC, School & all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.919.1681**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms walk-out furnished bsmt Apt. for rent. Parking. No pets & no smoking. Small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.834.1081**

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No smoking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**MEADOWVALE & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Rent $1,100. Close to HWY 401. 24 hrs. bus service. Avail. any time.
தொடர்புகளுக்கு: **416.939.4381**

**MARKHAM & BRIMORTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & Parking. Small family preferred. Close to Centennial college. Avail. immediately.
**416.575.6226/647.341.1657**

**PHARMACY & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt Apt. for rent. Sep. entrance. Close to public School, bus stop & all facilities. Couple / Ladies Preferred.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 16TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. 1.5 washroom. Sep.entrance, sep. laundry & parking. 2 mins. walk to YRT & TTC. Close to Mount Joy Go station & all other. facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.470.9549**

## ROOM FOR RENT

**PORT HOPE**
Rooms for rent. Male preferred. Close to College & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.939.5994**

**BRIMLEY & EGLINTON**
1 Room with attached washroom for rent in a bsmt. Sep. entrance & Parking. Close TTC, Subway, Nofrills. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.673.7516**

**MARKHAM & EGLINTON**
1 Furnished bedroom for rent in upstairs. Parking. 5 Min. walk to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.760.1498**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom for rent in a main floor. Food provided. 1 Minute walk to TTC. Avail. immediately.
**647.920.4394/437.604.9592**

**SCARBOROUGH** பகுதியில்
Bangalaw house Main floorஇல் சாப்பாட்டு வசதியுடன் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: **647.667.0482**

**MCCOWAN & SHEPPARD**
One bedroom available on a short term basis in a low rise 4 bedroom condo unit on the second floor. Weekly rent is $200 Month $800.
தொடர்புகளுக்கு: **647.292.8769**

**NEILSON & FINCH**
1 Private room for rent in a Condo. Parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.403.7268**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Large master bedroom with attached washroom for rent in the main floor. Ladies only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.972.3710**

**MIDLAND & ELLESMERE**
1 Furnished master bedroom for rent in main floor. Close to TTC school, retail, Tim Hortons. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.848.2544**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedrooms for rent in a town house. 1 Parking. Close to TTC, UofT, Centennial college & hospital. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.913.0171**

**MARKHAM & LAWRENCE**
**Scar. Golf Club - 567**-1 Big room for rent in a apartment. Male only. (2 Male) 1 Parking. 2 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.309.6493**

**MARKHAM & LAWRENCE**
2 Bedrooms for rent in a main floor. Female only. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

**MARKHAM & EGLINTON**
1 Bedroom for rent in a 2 bedrooms Condo.. Sep. washroom & Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.510.2176**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom for rent in a 2 Bedrooms bsmt. No parking. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

**ROUGHRIVER & SHEPPARD**
2 Bedrooms for rent in a main floor. Sep. washroom & parking. Female preferred. 10 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.920.2785**

**BRIMLEY & STEELES**
1 Bedroom available in a 2 bedrooms bsmt. Female (Working / student) to share with another girl. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.8349**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Male only. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.766.7779**

**NEILSON & SHEPPARD**
Rooms for rent. Utilities included. On-site Laundry. Sep. entrance Male only. 2 Minute walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.984.9783**

மேலும் பக்கங்கள் 12, 14, 15, 16

## ROOM FOR RENT

**WESTNEY & TAUNTON - AJAX**
2 Bedrooms for rent in a main floor. No Parking. Female/Seniors preferred. Close to TTC, Spiceland & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.969.4076**

**SALEM & ROSSLAND - AJAX**
3 Bedrooms for rent in a upper floor. 1 Bedroom for rent in a bsmt. Furnished. Close to bus stop, Amason, H&M. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.839.3546**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. No Parking. Close to bus stop (133, 39, 116, 53) & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.262.6616**

**MIDDLEFIELD & 14TH AVENUE**
1 Bedroom for rent in a main floor. Female only. Located beside Aaniin community centre. Close to all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **416.625.7535**

**KENNEDY & ELLESMERE**
1 Big room for rent in main floor. Male preferred. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.899.9199**

**ROSSLAND & CHURCH (AJAX)**
1 Bedroom with attached washroom for rent in upstairs. Sep. kitchen & laundry. Nearby bus stop & all facilities. Avail. immediately.
**416.425.3713/647.464.9464**

**VICTORIA PARK & LAWRENCE**
1 Bedroom for rent in a 2 bed rooms bsmt. 1 Bed available in a 2 people sharing room. Rent $550. Parking available.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**NEILSON & ELLESMERE**
Furnished rooms for rent in upstairs. 1 Parking. Close to TTC & & all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.247.9221**

## ROOM FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**
Private rooms / Sharing rooms for rent. Close to TTC & all the facilities. Avail.immediately.
**416.918.9848/416.857.7603**

## HOUSE FOR RENT

**STEELES & STAINES**
4 Bedrooms & 2.5 washrooms house for rent. 3 Parking. 1 Min. walk to TTC & all facilities. Family Preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.843.4331**

**MIDDLEFEILD & FINCH**
3 Bedrooms & 2.5 washrooms house for rent. 2 Parking. Close to TTC & GTA Mall. Family Preferred. Avail. March 01, 2026.
**416.300.7387/647.527.5715**

**MIDDLEFIELD & FINCH**
3 Bedrooms & 2.5 washrooms house for rent. 2 Parking & Sep. laundry. Close to TTC & all facilities. Avail. March 01, 2026.
**647.673.7416/647.539.3391**

**MARKHAM & SHEPPARD**
4 Bedrooms & 1.5 washrooms house for rent. 4 Parking. Very close to TTC. 5 Min. walk to New spiceland. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.299.9355**

**MARKHAM & STEELES**
4 Bedrooms & 2 living room house for rent. 3 washrooms & 2 parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.1529**

**NEILSON & FINCH**
3 Bedrooms house for rent. 2.5 washrooms, 2 parking. In front of Eraa super market & TTC. Family preferred. Avail. immediately.
**Contact: 647.895.4542**

**WHINCHTER & THICKSON - WHITBY -** 4 Bedrooms house & 2 bedrooms bsmt for rent. 1 parking. Close to bus stop, shopping centre & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.284.1962**

**WHITES & TAUNTON PICKERING -** 3 Bedrooms & 2.5 brand new townhouse for rent. 3 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.248.1095**

**MARKHAM & DENISON**
3 Bedrooms stacked townhouse for rent. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.967.3680/905.471.2223**

Vlambaram - JANUARY 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-31 7:45 PM Page 14



## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Unit**

**647-861-8240**

## CONDO. FOR RENT

**MARKHAM & DENISON**
2 +1 Bedrooms new Condo. townhouse for rent. 1 Parking. Close to bus stop, school & shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.201.8784**

**KINGSTON & PORT UNION**
2 Bedrooms & 2 washrooms brand new Condo. for rent. 1 Parking & Locker. Close to UTSC, HWY 401 & Go station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.772.3997**

**KINGSTON & WARDEN**
1 Bedrooms Condo. for rent. 24 Hours TTC, Close to Street car & Subway & Catholic School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

## CONDO FOR RENT

**MCLEVIN & NEILSON**
2 Bedrooms condo. for rent. 2 washrooms, balcony, living room, laundry room, kitchen & 1 parking. Avail. January 08, 2026.
தொடர்புகளுக்கு: **647.970.8392**

## CONDO. FOR LEASE

**KENNEDY & HWY 401**
2 Bedrooms Condo. for lease. 2 washrooms. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.277.9044**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
3 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & parking. No smoking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.712.2692**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12, 13, 15, 16

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedrooms & 2 full washrooms walkout bsmt for rent. Sep. entrance through Garage. 1 parking. Rent - $1,500
**416.918.9848/416.857.7603**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, internet & Sep. laundry. Close to all facilities. Students / couple preferred. Avail. immediately.
**647.856.9730/647.569.0376**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 washroom & 1 parking. Close to Costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.317.3055**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Close to TTC, Datta food & Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.8723**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to TTC, Mall & all facilities. Avail. immediately.
**416.271.5420/647.991.9631**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & EGLINGTON**
1 Bedroom + Den bsmt for rent. Sep. entrance, laundry & 1 parking. Close to TTC, Go station & Eraa supermarket. Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.278.3430**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Spacious bedrooms walkout bsmt for rent. 1 parking. Close to TTC, HWY 401, UTSC & all facilities. No smoking & No pets. Avail. immediately.
**416.624.6895 /416.721.7832**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent . Sep. entrance, parking & laundry. Close to facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.884.1125**

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Parking & sep. laundry. Close to all super markets, library & school. Small family/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.728.4067**

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
1 large bedroom, newly renovated bsmt for rent. Sep.entrance,5555 1 parking, Dish washer & large window. preferred young couples. Rent $1,750. Avail. Jan. 15, 2026.
**416.285.0249/416.509.4599**

## BASEMENT FOR RENT

**KINGSTON & WHITES**
**PICKERING** - 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking . Close to bus stop, Shopping mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.902.3103**

## BASEMENT FOR RENT

**FINCH & PHARMACY**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No Parking. Single person preferred. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.277.9044**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & BRIMORTON**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close STC, bus stop, School & all facilituies. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.6573**

## BASEMENT FOR RENT

**9TH LINE & HWY7**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance, 2 walking closet, 1parking. 5 Min. walk to school. Close to Stouffville hospital & walmart. Avail. Feb. 15, 2026.
தொடர்புகளுக்கு: **647.594.9698**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms & 1 washroom basement for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & EGLINTON**
3 Bedrooms & 1 washrooms bsmt. Apt. for rent.
**HOOVER PARK DR. & 10TH LINE STOUFFVILLE**
2 Bedrooms & 2 washrooms bsmt Apt. for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

## BASEMENT FOR RENT

**LAWRENCE & SCARBOROUGH GOLF CLUB -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. Close to TTC, bank, school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.649.8893**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & KINGSTON**
2 Bedrooms walkout bsmt for rent. Sep. entrance & 2 Parking. Close to TTC, UofT, Centernial college, Go station & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.850.6500**

## BASEMENT FOR RENT

**PORT UNION & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to TTC, Nofrills, Metro & all facilities. 3 Min. to HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.871.7082**

## ROOM FOR RENT
**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. No Parking. Sep. entrance & sep. laundry. 1 Min. walk to bus stop. Close to Mall & all facilities. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.527.8633**

## BASEMENT & ROOM FOR RENT
**NEILSON & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Room for rent in upstairs. Female only. 5 Min. walk to TTC. Close to Malvern Mall & School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.309.0925**

## HOUSE & BASEMENT FOR RENT
**MCCOWAN & DANFORTH**
3 Bedrooms in main floor & 2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Close to hospital, bus stop, school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.890.5273**

## HOUSE FOR RENT
**MCCOWAN & ALTON TOWERS**
4 Bedrooms & 2.5 washrooms house main floor for rent. 2 Parking. Close to TTC, HWY 401 & 407 & all facilities.
Avail. February 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

## ROOM FOR RENT
**SEWELLS & MORNINGSIDE**
2 Bedrooms for rent in a bsmt. No parking. Shared entrance. Close to Centennial college, UofT & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.262.3491**

## ROOM FOR RENT
**MCCOWAN & 14TH AVENUE**
1 Master Bedroom with attached washroom for rent in upstairs. 1 Parking. Close to TTC & all facilities. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.463.2732**

## HOUSE & BASEMENT FOR RENT
**MCLEVIN & NEILSON**
3 Bedrooms house for rent & 1 Bedroom bsmt for rent. 3 Parking. Close to TTC, Malvern Mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.299.4904**

## HOUSE FOR RENT
**WHITES & TAUNTON**
**(Pickering)** 4 Bedrooms & 2.5 washrooms house for rent. 2 Parking. Close to all facilities. Avail. immediately.
**416.300.1796/647.504.9712**

## ROOM FOR RENT
**LAWRENCE & BELLAMY**
2 Bedrooms for rent in upstairs. Close to bus stop, Cederbrae mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.949.6204**

## HOUSE & BASEMENT FOR RENT
**LAWRENCE & PORT UNION**
3 Bedrooms in main floor & 1 Bed room bsmt for rent. Sep. entrance & parking. Close to Centennial college, Scar. campus. & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.406.2435**

## HOUSE FOR RENT
**9TH LINE & 14TH AVENUE**
4 Bedrooms & 3 washrooms house for rent. Rent - $3,300. Close to TTC & all the facilities. Avail.immediately.
**416.918.9848/416.857.7603**

## HOUSE FOR RENT
**NEILSON & SHEPPARD**
4 Bedrooms & 1.5 washrooms house for rent. 2 Parking & Sep. laundry. 2 Min. walk to TTC. Close to Malvern Mall & all facilities. Avail. immediately.
**416.725.7855/416.262.9404**

## HOUSE /ROOM FOR RENT
**TAPSCOTT & FINCH**
3 Bedrooms & 3 washrooms house for rent. Rent $2,900+ Utility. Rooms for rent. Rent$800. No alcohol, no pets & no smoking. Avail. immediately.
**647.507.2148/647.864.1051**

## CONDO. & BASEMENT FOR RENT
**CROW TRAIL & NEILSON**
2 Bedrooms & 2 full washrooms Condo. for rent. 1 Parking.
**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking.
தொடர்புகளுக்கு: **416.509.7247**

## HOUSE & CONDO. FOR RENT
**MCCOWAN & FINCH**
3 Bedrooms town house for rent. 1.5 washrooms & 2 parking.
**MARKHAM & HWY 401**
1 Bedroom Condo. for rent. 1 Parking. Close to STC, bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.820.2539**

## HOUSE FOR RENT
**NEILSON & TAPSCOTT**
4 Bedrooms & 1.5 washrooms town house for rent. 2 Parking. Close to TTC, Malvern Mall, School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.562.5239**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
1 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms & 2 washrooms Two-story Townhouse for rent. Parking & laundry. Close to all major supermarkets, 24Hr Bus with 1 minute walk. No pet or smoke.
தொடர்புகளுக்கு: **416.477.8746**

## HOUSE FOR SALE
**9TH LINE & MAIN ST.**
**Stouffville** - 4 + 2 Bedrooms house for private sale. Close to all facilities. 1st time Buyer preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.829.4133**

## OFFICE SPACE FOR RENT
**MARKHAM & FINCH- SCABOROUGH**
**MAIN & QUEEN ST. - BRAMPTON**
Office rooms for rent. Suitable for professional offices & Meeting Space /Medical Clinic/ Educational Classes. Evening 5Pm-10Pm (Week days) & weekends class rooms for rent.
**416.918.9848/416.857.7603**

## HOUSE & BASEMENT FOR RENT
**SCABOROUGH -** - 4 Bedrooms / 3 Bedrooms house & 2 Bedrooms basement.
**MARKHAM & STEELES** - 4 Bedrooms house & 2 Bedrooms basement.
**PICKERING** - 4 Bedrooms house & 2 Bedrooms basement.
**AJAX** - 4 Bedrooms house & 2 Bedrooms basement.
தொடர்புகளுக்கு: **647.850.7831**

## BASEMENT/ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 Bedroom for rent in a main floor. Close to TTC, UofT, shopping mall & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.274.7088**

## BASEMENT/ROOM FOR RENT
**9TH LINE & HOOVER PARK -** 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking.
**MARKHAM & STEELES -**1 Bedroom bsmt for rent. Sep. entrance.
**CONLINS & SHEPPARD -** Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.3355**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
3 Bedrooms & 3 washrooms mainfloor & 2 Bedrooms bsmt full house for rent. Sep. entrance & 4 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.883.1054**

## HOUSE FOR RENT

**NEILSON & SHEPPARD**

4 Bedrooms & 1.5 washrooms main floor for rent. 2 Parking. Close to TTC, Malvern Mall, Centeneneil college & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.357.5407/647.339.9943**

## வயோதிபர் பராமரிப்பு

**SCARBOROUGH**வில் குறுகியகால மற்றும் நீண்ட கால முதியோருக்கான பராமரிப்பு குறைந்த கட்டணத்துடன் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.667.0482**

## குழந்தை பராமரிப்பு

**SCARBOROUGH** பகுதியில் உள்ள வீட்டில் குழந்தையைப் பராமரிப்பதற்கு உதவுவதற்கு பெண் ஒருவர் தேவை. தங்குமிடம் உணவு வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: **437.440.5578**

## FOR RENT - HOUSES, CONDOS & BASEMENTS

**SCARBOROUGH -PHARMACY & SHEPPARD -**2 Bed/2 Bath Condo.
**PICKERING - WHITE & TAUNTON -** 4 Bed /4 Bath house
**AJAX - LAKE RIDGE & ROSSLAND -** 2 Bed Basement
**WHITBY - LAKE RIDGE & DUNDAS -** 1+Den Basement
**MORNINGSIDE & MCNICOLL -** 2 Bed Basement

Please call or text - **647.269.0193**

## FINANCIAL CONSULTATION

1. Stop Power of Sale
2. Private Financing
3. Bankcrutcy
4. Consumer Proposal.
5. Credit Repair

**Contact: 647.514.0431**

## JOB VACANCY

**STUDENTS RECRUITERS**

**LOCATION : SCARBOROUGH / BRAMPTON** (Full time / Part time)
**Requirement -** University degree (Canada) & 10 Years Institutional experience & Communication skills in English & Tamil.

**416.918.9848 /416.857.7603**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME / PART TIME

**CHEF, LINE COOK & BREAKFAST COOK**

**QUEEN & LESLIE**இல் அமைந்துள்ள **English Pub** ஒன்றிற்கு **Chef, line Cook & Breakfast cook** போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.

**Call: 416.220.9179 Email: chadsenagroup@gmail.com**

## வேலைக்கு ஆள் தேவை

**வயோதிபர் பராமரிப்பு**

**MARKHAM & ELLESMERE** பகுதியில் உள்ள வீட்டில் பகுதிநேரமாக வயோதிபர் ஒருவரைப் பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:**647.703.8916**

## பராமரிப்பாளர் தேவை

வயோதிபப் பெண்மணியைப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். **OSHAWA**வில் வாழ்பவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **416.875.0976**






## PARTNERSHIP

**KITCHEN FACTORY**

நடைமுறையில் இயங்கிவரும் கம்பனியுடன் இணைந்து செயல்படுவதற்கான அரிய சந்தர்ப்பம்.

இடம்: **Scarborough**

**4+** வருட அனுபவம் தேவை (Kitchen cabinet Making)

**Contact: 647.514.0431**

## WALK IN CLINIC

**DR.U.SOMASUNDARAM**

Family Physician
1200 Markham Road, Unit No.115
Scarborough, ON M1H 2Y9

**T: 416.439.8085**

**Open Hours - Monday - Friday**
**9:00Am - 7:00 Pm**

## PHOTOGRAPHY

உங்கள் வீட்டின் சிறியளவிலான மற்றும் பெரியளவிலான கொண்டாட்டங்களுக்கு **Professional Photography** சேவை எம்மிடம் உண்டு



படப்பிடிப்புத் தேவைகளுக்கு
அழையுங்கள்:
**416.277.4245**







Watson Property Management
WPM
We Pro-Manage your Properties!

FREE
FOR CONSULTATION/ SUGGESTIONS!
416 284 9999

MANAGING OVER 100 PROPERTIES ACROSS VARIOUS CITIES AND TOWNS WITHIN A 2-HOUR RADIUS OF TORONTO.




WATSON PROPERTY MANAGEMENT

About Us

With 30 years of experience in real estate, we proudly manage over 100 properties for diverse landlords, including:
- Foreign property owners
- Multi-property investors
- First-time buyers looking to maximize their property Value

We ensure cost-effective and hassle-free property management, handling everything from marketing to maintenance.

AJAX
BRAMPTON
BOWMANVILLE
BEAVERTON
COURTICE
ETOBICOKE
KESWICK
KINGSTON
MARKHAM
VAUGHAN
STOUFFVILLE
KITCHENER
MISSISSAUGA
NORTH YORK
OSHAWA
PICKERING
SCARBOROUGH
TORONTO
TRENTON
WHITBY
WATERLOO
NIAGARA
NEWCASTLE
RICHMOND HILL

Our Services

Effective Marketing
Maximize property exposure.

Affordable Maintenance
Trustable handymen with cost effective repairs.

Property Showings
Find the right tenants.

Market Updates
Stay informed on property value.

Tenant Screening
Secure reliable and responsible renters.

Lease Renewals & Rent increase
Maximize rental income.

Lease Preparation
Handle all paperwork.

Financial Reports
Year-end accounting for tax purposes.

Move-in Assistance
Stress-free key handovers.

Legal Notices & Paralegal Support
Professional paralegal guidance.

Rent & Utilities Collection
Timely payments guaranteed.

Move-out Management
Key collection and final walkthroughs.

Regular Inspections
Regular walkthroughs every 6 months.



We're Expanding & Hiring!

As we CONTINUE TO GROW and serve more areas, we're looking for reliable handymen to join our trusted maintenance NETWORK.
If you're a skilled handyman OR know someone who is we'd love to hear from you! WE'D love to work together.

REACH US @: 416 284 9999

# லோகா பாகம் 1 : சந்திரா – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

அதிக பணம் உழைத்த மலையாளப் படமான இது 'லோகா' என்ற படத் தொடரின் முதல் படமாக அமைந்துள்ளது. இந்த படம் தமிழ், தெலுங்கு, இந்தி உட்பட்ட பல மொழிகளில் 2025இல் வெளியானது.

இப்படத்தில் சந்திரா (கல்யாணி பிரியதர்ஷன்) என்ற பெண் வெளி நாட்டிலிருந்து தென்னிந்திய நகரம் ஒன்றிற்கு வருகிறார். அங்கு உணவகம் ஒன்றில் இரவு வேலை எடுத்துக்கொண்டு தொடர்மாடிக் கட்டிடம் ஒன்றில் வாழ்ந்து வருகிறார்.

அவருக்கு எதிரிலுள்ள தொடர்மாடிக் கட்டிடத்தில் Sunny (Naslen) என்பவர் தனது நண்பர்களுடன் வாழ்ந்து வருகிறார். சந்திராவைக் கண்டவுடன் Sunny அவரை விரும்புகிறார். சந்திரா இரவில் வேலைக்குச் செல்வதையும், தனியாக இருப்பதையும், அவரது வீட்டிற்கு ஒழுங்காகப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதையும் Sunny கவனித்து வருகிறார். இவற்றைப் பார்க்கும்போது சந்திராவைச் சுற்றி விசித்திரமான செயல்கள் நடப்பதை Sunny கவனிக்கிறார்.


இவற்றிற்கும் மேலாக அவர்கள் வாழும் நகரில் மனித உடல் உறுப்புகள் விற்பனை நடப்பது அதிகரித்து வருகிறது. அதேநேரம் அங்கு நாச்சியப்பா என்ற



நேர்மையற்ற காவல் அதிகாரி சந்திராவை கவனிக்கத் தொடங்குகிறார்.

சந்திரா யார்? அவர் ஏன் அங்கு வந்தார்? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

அண்மையில் இந்திய சினிமாவில் விஞ்ஞான புனைகதை, Fantasy, Superheroes போன்ற கதை அமைப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இத்தகைய அமைப்பை உலகத்தரத்தில் இப்படம் கொண்டிருந்தாலும் அதன் கலாசாரத்தை மறக்கவில்லை. கேரளாவின் முக்கிய கதைகளும் நம்பிக்கைகளும் இதில் இடம்பெறுகின்றன. தமிழருக்கு இவை நேரடியாகத் தெரியாவிட்டாலும் விளங்கக் கூடியதாக உள்ளது. அத்தோடு ஆண் கதாபாத்திரம், அவரது நண்பர்கள், வில்லன் போன்றவர்களின் நடைமுறை இந்தியப் படங்களுக்கு மிகவும் பரீட்சயமாகவே உள்ளது.
இப்படத்தின் சிறப்பு கதாநாயகி ஆகும்.



சந்திரா உண்மையில் கதையின் நாயகியாக இப்படம் முழுவதும் வருகிறார். பொதுவாக கதாநாயகனுக்கு இருக்கும் தைரியம், சண்டை பிடிக்கும் முறை, சக்தி போன்றவை நம்பத்தக்க முறையில் சந்திராவிற்கு இப்படத்தில் இருக்கின்றன.



வேறுபடங்கள் இத்தொடரில் வெளிவர வேண்டும் என்பதால், புது ஆண் கதாபாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அவை சந்திராவின் கதாநாயகித் தன்மையைக் குறைக்கவில்லை. அவளது சண்டைகள் அவளால் தான் வெற்றி கொள்ளப்படுகின்றன. பண்டைய கதைகளை புதிய முறையில் கூறி, கதாநாயகிக்கு சிறப்பளிக்கும் இப்படத்தை அதிரடி, விஞ்ஞான புனைகதை போன்றவற்றை விரும்பும் அனைவரும், ஏனையோரும் இப்படத்தை பார்க்கலாம்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# 2026 FIFA உலகக் கோப்பை



- எஸ். கணேஷ் -

2026 FIFA உலகக் கோப்பை போட்டிகள் ஜூன் 11, 2026 முதல் ஜூலை 19, 2026வரை கனடா, மெக்சிகோ மற்றும் அமெரிக்காவால் இணைந்து நடத்தப்படுகிறது. இது 48 அணிகள் மற்றும் 104 போட்டிகளைக்கொண்ட முதல் உலகக் கோப்பைப் போட்டி ஆகும். இதில் மூன்று வட அமெரிக்க நாடுகளில் போட்டிகளை நடத்தும் 16 நகரங்கள் பங்கேற்கின்றன. இந்தப் போட்டியில் கனடிய மண்ணில் முதல் முறையாக ஆண்கள் உலகக் கோப்பைப் போட்டிகள் நடைபெறும். ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் நகரங்கள் இரண்டும் போட்டிகளை நடத்துகின்றன.

48 அணிகள் இடம்பெறும் முதல் போட்டி இதுவாகும். இது 32 அணிகள் நடத்திய முன்னைய போட்டிகளில் இருந்து விரிவாக்கப்பட்டுள்ளது. 2002இற்குப் பின்னர் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் நடத்தும் முதல் உலகக் கோப்பை இதுவாகும். 1970 மற்றும் 1986 ஆண்டுகளில் போட்டிகளை நடத்தியதன் மூலம், ஆண்கள் உலகக் கோப்பையை மூன்று முறை நடத்தும் அல்லது இணைந்து நடத்தும் முதல் நாடாக மெக்சிகோ மாறும். அமெரிக்கா கடைசியாக 1994இல் ஆண்கள் உலகக் கோப்பையை நடத்தியது. அதே நேரத்தில் கனடா முதல்முறையாக ஆண்கள் போட்டியை நடத்துகிறது. அத்துடன் முதல் முறையாக மூன்று நாடுகளுடன் இணைந்து நடத்துகிறது.

நடத்தும் நாடுகள்: கனடா, மெக்சிகோ மற்றும் அமெரிக்கா அனைத்தும் தானாகவே பங்குபெறத் தகுதி பெற்றுள்ளன. அதேநேரத்தில் ஜோர்டான், உஸ்பெகிஸ்தான், கேப் வெர்டே (Cape Verde) மற்றும் குராசோ (Curacao) உலகக் கோப்பையில் இம்முறை அறிமுகமாகிறது. 2022ஆம் ஆண்டில் பட்டத்தை வென்ற ஆர்ஜென்டினா நடப்புச் சாம்பியனாக உள்ளது.

BMO களம், Exhibition place, Toronto

ஜூன் 12, 2026 கனடா vs TBD - கால்பந்து உலகக்கோப்பை (போட்டி 3)
ஜூன் 17, 2026 TBD vs TBD - கால்பந்து உலகக்கோப்பை (போட்டி 21)
ஜூன் 20, 2026 TBD vs TBD - கால்பந்து உலகக்கோப்பை (போட்டி 33)
ஜூன் 23, 2026 TBD vs TBD - கால்பந்து உலகக்கோப்பை (போட்டி 46)
ஜூன் 26, 2026 TBD vs TBD - கால்பந்து உலகக்கோப்பை (போட்டி 62)
ஜூலை 02, 2026 K* vs L* -கால்பந்து உலகக்கோப்பை - 32வது சுற்று (போட்டி 83)
TBD - To be determine (தீர்மானிக்கப்படவுள்ளது)
* - Runnerup Group

மே 02, 2025 அன்று, போட்டிக்கான பந்து அடிடாஸ் ட்ரையோண்டா (adidas trionda) என்று அழைக்கப்படும் என்று தகவல்கள் வெளி வந்தன. இந்த வடிவமைப்பில் சிவப்பு, பச்சை மற்றும் நீலம் (கனடா, மெக்ஸிகோ மற்றும் அமெரிக்காவைக் குறிக்கும் மூன்று வண்ணங்களும் இடம்பெறுகின்றன. அத்துடன் ஒவ்வொரு வண்ணங்களையும் இணைக்கும் ஒரு வெள்ளை அலையும் உள்ளது. எனவே மூன்று (ட்ரை) மற்றும் அலை (ஓண்டா) ஆகியவற்றிற்கான ஸ்பானிஷ் சொற்களைப் பயன்படுத்தி இந்தப் பெயர் வந்தது. இந்த வடிவமைப்பில் மூன்று ஹோஸ்ட் நாடுகளின் தேசிய சின்னங்களும் (கனடாவிற்கு ஒரு மேப்பிள் இலை, மெக்ஸிகோவிற்கு ஒரு தங்கக் கழுகு மற்றும் அமெரிக்காவிற்கு ஐந்து புள்ளிகள் கொண்ட நட்சத்திரம்) மற்றும் உலகக் கோப்பையை பிரதிநிதித்துவப்படுத்தும் தங்க அலங்காரங்களும் உள்ளன.

| Group A | | Group B | | Group C | | Group D | |
|---|---|---|---|---|---|---|---|
| Pos | Team | Pos | Team | Pos | Team | Pos | Team |
| A1 | *Mexico* | B1 | *Canada* | C1 | Brazil | D1 | *United States* |
| A2 | South Africa | B2 | UEFA Path A winner | C2 | Morocco | D2 | Paraguay |
| A3 | South Korea | B3 | Qatar | C3 | Haiti | D3 | Australia |
| A4 | UEFA Path D winner | B4 | Switzerland | C4 | Scotland | D4 | UEFA Path C winner |

| Group E | | Group F | | Group G | | Group H | |
|---|---|---|---|---|---|---|---|
| Pos | Team | Pos | Team | Pos | Team | Pos | Team |
| E1 | Germany | F1 | Netherlands | G1 | Belgium | H1 | Spain |
| E2 | Curaçao | F2 | Japan | G2 | Egypt | H2 | Cape Verde |
| E3 | Ivory Coast | F3 | UEFA Path B winner | G3 | Iran | H3 | Saudi Arabia |
| E4 | Ecuador | F4 | Tunisia | G4 | New Zealand | H4 | Uruguay |

| Group I | | Group J | | Group K | | Group L | |
|---|---|---|---|---|---|---|---|
| Pos | Team | Pos | Team | Pos | Team | Pos | Team |
| I1 | France | J1 | Argentina | K1 | Portugal | L1 | England |
| I2 | Senegal | J2 | Algeria | K2 | IC Path 1 winner | L2 | Croatia |
| I3 | IC Path 2 winner | J3 | Austria | K3 | Uzbekistan | L3 | Ghana |
| I4 | Norway | J4 | Jordan | K4 | Colombia | L4 | Panama |

## List of all World Cup Winners

1930 in Uruguay : Uruguay def. Argentina 4-2
1934 in Italy: Italy def. Czechoslovakia 2-1 (ET)
1938 in France: Italy def. Hungary 4-2
1950 in Brazil: Uruguay def. Brazil 2-1
1954 in Switzerland: West Germany def. Hungary 3-2
1958 in Sweden: Brazil def. Sweden 5-2
1962 in Chile: Brazil def. Czechoslovakia 3-1
1966 in England: England def. West Germany 4-2 (ET)
1970 in Mexico: Brazil def. Italy 4-1
1974 in West Germany: West Germany def. the Netherlands 2-1
1978 in Argentina: Argentina def. the Netherlands 3-1 (ET)
1982 in Spain: Italy def. West Germany 3-1
1986 in Mexico: Argentina def. West Germany 3-2
1990 in Italy: West Germany def. Argentina 1-0
1994 in USA: Brazil def. Italy 0-0 (3-2 PKs)
1998 in France: France def. Brazil 3-0
2002 in Japan: Brazil def. Germany 2-0
2006 in Germany: Italy def. France 1-1 (5-3 PKs)
2010 in South Africa: Spain def. the Netherlands 1-0 (ET)
2014 in Brazil: Germany def. Argentina 1-0 (ET)
2018 in Russia: France def. Croatia 4-2
2022 in Qatar: Argentina def. France 3-3 (4-2 PKs)

டிசெம்பர் 2025இல், FIFA பங்கேற்கும் அனைத்து நாடுகளுக்கும் பரிசுகளை அறி வித்தது. தகுதி பெற்ற ஒவ்வொரு அணியும் போட்டிக்கு முன் தயாரிப்பு செலவுகளை ஈடுகட்ட $1.5 மில்லியனைப் பெறும். இதனால் குறைந்தபட்சம் $10.5 மில்லியன் பரிசுத் தொகை உறுதி செய்யப்படுகிறது. மொத்த பரிசுத் தொகை $655 மில்லியனாக இருக்கும். இது முந்தைய போட்டியின் பரிசுத் தொகையை விட $215 மில்லியன் அதிகமாகும்.

| Place | Teams | Amount (in millions) | |
|---|---|---|---|
| | | Per team | Total |
| Champions | 1 | $50 | $50 |
| Runners-up | 1 | $33 | $33 |
| Third place | 1 | $29 | $29 |
| Fourth place | 1 | $27 | $27 |
| 5th–8th place (quarter-finals) | 4 | $19 | $76 |
| 9th–16th place (round of 16) | 8 | $15 | $120 |
| 17th–32nd place (round of 32) | 16 | $11 | $176 |
| 33rd–48th place (group stage) | 16 | $9 | $144 |
| Total | 48 | $655 | |




**பகவான் கிருஷ்ணன்**
**மகாபாரத யுத்தத்தில் அர்ஜுனனுக்கு**
**உபதேசித்த அருளுரைகள்**

மான அவமானங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் நிலைகுலைந்து போகச் செய்யும் சூழ்நிலைகள், நம்பிக்கைத் துரோகங்கள், செய்யும் காரியத்தில் நஷ்டங்கள், வஞ்சகச் சூழ்ச்சிகள், எதிர்ப்புகள், உறவினர்கள், நண்பர்களின் சூதுகள், அன்பின் இழப்புகள், சுக துக்கங்கள் இவையெல்லாம் மானிட வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகள். இதுபோன்ற போராட்டங்களையெல்லாம் மன உறுதியுடனும், துணிச்சலுடனும், பொறுமையுடனும், நிதானத்துடனும் எதிர்கொள்கின்ற மானிடன் எவனோ. அவனே! மிகச் சிறந்த பராக்கிரமம் பொருந்திய வெற்றியாளனாகப் பரிணாமிக்கிறான். **பகவத்கீதை**



அன்பும் ஆனந்தமும் பொங்கிட
அறமும் வளமும் தழைத்திட
இல்லமும் உள்ளமும் பொங்க
பொங்கல் நல்வாழ்த்துகள்

Vlambaram - JANUARY 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-31 7:45 PM Page 19



# ஈழத்துத் தமிழறிஞர் சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை



**T. சிவபாலு**


தமிழறிஞர் வி.கல்யாண சுந்தரனாருக்குத் தமிழ்மீது பற்றையும் பாசத்தையும் ஊட்டியவர் ஈழத்து அறிஞரான சதாவதானி கதிரவேற்பிள்ளையவர்கள். யாழ்ப்பாணத்து வடமராட்சிப்பகுதியில் உள்ள மேலைப் புலோலியில் பிறந்தவர் பிள்ளையவர்கள். திரு. நாகப்பிள்ளை சிவகாமி அம்மையாருக்கு அருந்தவப் புதல்வனாக 1871இல் பிறந்தவர் தமிழ்க் கடல் கதிரவேற்பிள்ளை அவர்கள். புலோலியில் உள்ள வைசப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றுக்கொண்ட அவர் தொடர்ந்தும் கற்க வேண்டும் என்னும் அவாக்கொண்டவராகக் காணப்பட்டார். ஆரம்பக்கல்வியை முடித்துவிட்டு கணக்காளராக வேலை பார்த்த அவருக்கு அந்த வேலையில் நாட்டம் இருக்கவில்லை. படிக்கவேண்டும் என்னும் தளராத சிந்தையோடு விடாப்பிடியாக இருந்த அவர் சென்னைக்குச் சென்று திரு. க. கனகசுந்தரம்பிள்ளை அவர்களிடம் தமிழைக் கற்றார்.

சென்னையில் இருந்த காலத்தில் அச்சக உரிமையாளர் சிவசங்கரன் செட்டியாருடன் நட்புரிமை பூண்டு எழுத்துத் திருத்தும் பணியில் ஈடுபட்டார். அது அவரின் வாழ்க்கைச் செலவின் ஒருபகுதியை நிவர்த்தி செய்தது. கல்வியில் சிறப்புற விளங்கிய கதிரவேற்பிள்ளை அவர்கள் அவரது 26ஆவது வயதில் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பதவியைப் பெற்றுக் கொண்டார். ஆங்கில மோகங்கொண்டவர்களைத் தனது தமிழ்த் திறமையால் தமிழில் ஆர்வமுள்ள மாணாக்கர்களாக மாற்றினார். அவர்களுள் ஒருவர் மிகப் பிரபலமாக விளங்கிய திரு.கல்யாணசுந்தர முதலியார் ஆவார். ஆசானின் கல்வியூட்டும் முறைமையும் அவரின் ஆசாரா நாட்டமும் திரு.வி.க.வைக் கவர்ந்திழுத்தன. “சென்னை வெஸ்லி கலாசாலையில், யான் மாணாக்கனாயிருந்தபோது, யாழ்ப்பாணம் நா.கதிரவேற்பிள்ளை அவர்களது அன்புக்கு உரியவனானேன். ஆங்கிலத்தில் பித்துக்கொண்டு திரிந்த எனக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவர்” எனத் தம் வாழ்க்கைக் குறிப்பில் நெகிழ்ந்து கூறியுள்ளார் திரு வி.க. தமிழறிஞராக திரு.வி.க அவர்களை உருவாக்கியவர் சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை அவர்களே.

இதுகாறும் இருமொழி அகராதிகளே வெளிவந்துள்ளன. ஒரு மொழிக்கான அகராதியின் தேவையை உணர்ந்த கதிரவேற்பிள்ளை அவர்கள் இரவுபகலாக முயற்சித்து ஓர் அகராதியைத் தயாரித்து அச்சுருவேற்றினார். அது பலராலும் புகழப்பட்டதோடு பல வெளியீடுகள் வெளிவந்தன என்றால் அந்த அகராதியின் சிறப்புப்பற்றி எடுத்துரைக்கவேண்டியதில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனரும், பாலவநத்தம் ஜமீந்தாருமாகிய பாண்டித்துரைத் தேவர், அந்த அகராதியைக் கண்ணுற்றபோது அக மகிழ்ந்து சிறப்புப் பாயிரமாகச் செய்யுள் ஒன்றை அனுப்பி கதிரவேற்பிள்ளையைப் பாராட்டினார். அறிஞர் உலகம், அகராதிப் பணியை ‘அரிய தமிழ்த் தொண்டு’ எனக் கூறி வியந்து மகிழ்ந்தது.

“கதிரவேற்பிள்ளை வெளியிட்ட அகராதியே திருத்தமும், பொருத்தமும்கொண்டு, பிழைகளறப் பதிப்பித்த முதற் பேரகராதி” என வையாபுரிப்பிள்ளை அவர்கள் போற்றிப் பாராட்டினார் என்றால் அந்த அகராதியின் சிறப்பையும் ஒழுங்கமைப்பையும்பற்றி அறிந்துகொள்ளலாம்.



பழனி முருகன் ஆலயத்தின் சீர்திருத்தப் பணிகள் தொடங்கியவேளை உட்சுவரை அலங்கரிக்க முருகனின் வரலாற்றுச் சிறப்புக்களை சித்தரிக்கும் ஓவியங்களைத் தீட்ட அறங்காவல் சபையினர் தீர்மானித்தனர். அதற்காக ஒரு சிறந்த நூலைத் தேர்ந்தெடுத்து அதன் அடிப்படையில் ஓவியங்களை வரையலாம் என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் திரு. கதிரவேற்பிள்ளை அவர்களால் ஆக்கப்பட்ட ‘சுப்பிரமணிய பராக்கிரமம்’ என்ற நூல் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்நூல் பிள்ளை அவர்களின் தமிழாற்றலுக்கும் முருக பக்திக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அத்தோடு யாழ்ப்பாணத்துச் சைவப் புலவரும் தமிழறிஞருமான கந்தப்பசுவாமிகள் தனக்கு ஏற்பட்ட நோய் தீராது ஆலயம் ஆலயமாக ஏறி இறங்கினார். ஈற்றில் கதிர்காமம் முருகன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டுக் கொண்டிருக்கும்வேளை அந்த நோய் குணமடைந்தது. இதனால் வியப்புற்ற கந்தப்பசுவாமிகள் முருகன் மீது ‘கந்தன் கலம்பகம்’ என்னும் நூலை இயற்றினார். அந்த நூல் செல்லரித்திடாது எடுத்துப் பாதுகாத்து அச்சேற்றியவர் கதிரவேற் பிள்ளை அவர்களே.

இந்த அளப்பரும் சேவையை வியந்து தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் அவர்கள் பின்வருமாறு ஒரு வெண்பாவினாலே பாராட்டியுள்ளார்.

“கந்தப்பர் செய்த கதிர்காமக் கலம்பகத்தை,
சந்தமொடும் அச்சிட்டான் சால் புறவே - சந்தமுங்
கந்தனடி பேணுங் கதிரவேற் பிள்ளையெனும்
அந்த தமிழ்ப் பாவாணன் இனிது ஆய்ந்து!”

‘பழனித் தலப் புராணம்’, ‘திருவருணைக் கலம்பகம்’, ‘சிவராத்திரிப் புராணம்’ ஆகிய நூல்களுக்கு உரை எழுதிய கதிரவேற் பிள்ளை, அதிவீரராம பாண்டியன் இயற்றிய தமிழ்க் கூர்ம புராணத்திற்கு விளக்கவுரை கண்டார். புலமை கொண்டோர் போற்றும் நைடதத்துக்கு ஓர் ஆய்வுரை எழுதிய பிள்ளையவர்களின் நுண்மான் அறிவு நலத்தைப் பாராட்டாத தமிழ்ப் பண்டிதர்களே இல்லை எனலாம். புதுக்கியும், திருத்தியும், விளக்கியும் இணைத்து வழங்கிய விருத்தியுரை, புலவர் பெருமக்களுக்குப் பெரிதும் வியப்பை அள்ளி வீசியது.

நூல்களை எழுதியதோடு, அகராதியையும் பதிப்பித்த பிள்ளையவர்களின் தமிழ்ப்பணி பல நூல்களுக்கு உரை, பொழிப்புரை, விளக்கவுரை என்பனவற்றையும் எழுதுவதில் தொடர்ந்தது.

1. பழனித் தல புராணம்
2. திருவருணைக் கலம்பகம்,
3. சிவராத்திரி புராணம் ஆகிய மூன்று நூல்களுக்கு தெளிவுரையும், அதிவீரரம பாண்டியன் இயற்றிய தமிழ்க் கூர்ம புராணத்திற்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். அதனைவிட நைடதத்திற்கு ஓர் ஆய்வுரையும் எழுதிய பிள்ளையவர்கள் தமிழ் கூறும் நல்லுகால் போற்றத்தக்க நுண்மாண் நுழைபுலம் கொண்ட பேரறிஞராகத் திகழ்கின்றார்.

வள்ளலார் இராமலிங்க சுவாமிகளால் இயற்றப்பட்ட பாடல்கள் அருட்பாக்கள் அல்ல அவை மருட்பாக்களே என ஆறுமுகநாவலரின் வழியில் நின்றுரைத்த கதிரவேற்பிள்ளை அவர்களை இராமலிங்கரது பாடல்கள் அருட்பாக்களின் இடத்தை நிரப்பமாட்டா என வாதிட்டார். இதனைப் பொறுக்காத இராமலிங்கரது சீடர்கள் சென்னை நீதி மன்றத்தில் இராமலிங்கரை அவதூறு செய்ததாக வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கில் தேவார திருமுறைகளை எடுத்து அவற்றின் பிரமாணங்களை ஒப்புநோக்கி வழக்கில் வெற்றி பெற்றார். இதனைப் பாராட்டினார் அவரது மாணாக்கரான திரு.வி.க அவர்கள்.

“அருட்பா வென்பது ஆறிரு முறையே என்று அரசமன்ற மேறிப் பசுமரத் தாணிபோல் நாட்டி” என்றும்;
“மன்னவர் நீதி மன்றினி லேறிப்
பன்னிரு முறையே உன்னருட் பாவென்
றாணி பசுமரத் தறைந்தா லென்னக்
காட்டிச் சாத்திரம் நாட்டின னெவனோ;..
தவன னெவனோ வவனது ஞாபக
சின்னம தாகச் செய்தனம்
உரிமை யுலகமு முவந்திட வினிதே”

தமிழ்நாட்டுச் சைவ மடங்கள், ஜமீன்தார்கள், புரவலர்கள், என்போர் நா. கதிரவேற்பிள்ளை அவர்களுக்கு ‘நாவலர்’, ‘சைவசித்தாந்த மகாசரபம்’, ‘அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்’, ‘மகாவித்துவான்’, ‘பெருஞ்சொற்கொண்டல்’ போன்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளனர். சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் அறிஞர்கள் முன்னிலையில் சதாவதானம் செய்து ‘சதாவதானி’ என்னும் பட்டத்தையும் பெற்றார்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உநற்யும்
தெய்வத்துள் வைக்கப்படும்” என்னும் பொய்யாமொழியின் வழியே 38 ஆண்டுகள் மட்டும் வாழ்ந்த பிள்ளையவர்கள் புகழ்பரப்பி வாழந்த தமிழறியராவார். 1907இல் கடும்சுரம் காரணமாக இவ்வுலக வாழ்வை நீத்தார்.

---



## படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!



அந்தச் சிறுவனுக்கு ஏழு வயதுக்குள்ளாகவே எவ்வளவு கோபம் வருகிறது. கத்தித் தீர்த்து விடுவான். அம்மா, அப்பா, அக்கா, தாத்தா, பாட்டி யாரும் விதிவிலக்கில்லை. ஒரு நாள் அப்பா அவனிடம் கை நிறைய ஆணிகளையும் சுத்தியலையும் கொடுத்தார். “இனிமேல் கோபம் வந்தால் யாரையும் திட்டாதே! ஒவ்வொரு முறை கோபம் வரும்போதும் நம் வீட்டின் பின் சுவரில் ஆணி அடி” என்றார். முதல் நாள் 7 ஆணிகள், மறுநாள் 5 ஆணிகள் என்று அடித்தான் சிறுவன். ஆணி அடிக்க அடிக்கக் கோபம் குறைந்தது. ஒரு நாள் ஒரேயொரு ஆணிதான் அடித்திருந்தான். எண்ணிப் பார்த்தால் 45 ஆணிகள்.

அப்பா சொன்னார் “இனி கோபம் வராத நாட்களில் ஒவ்வோர் ஆணியாகப் பிடுங்கி விடு”. 45 நாட்களில் புதிய ஆணிகள் அடிக்கப்படவில்லை. பழைய ஆணிகள் பிடுங்கப்பட்டு விட்டன. பெருமையுடன் அப்பாவை அழைத்துக் காட்டினான். அப்பா சொன்னார், “ஆணிகளைப் பிடுங்கி விட்டாய். சுவற்றில் உள்ள ஓட்டைகளை என்ன செய்வாய்? உன் கோபம், இதுபோல் பலரைக் காயப்படுத்தியிருக்கும் அல்லவா?”. வெட்கித் தலை குனிந்தான் சிறுவன்.

**பாடம்:** பிறரைக் காயப்படுத்துவதை நிறுத்தினால் வாழ்க்கை புதிய அர்த்தம் பெறும்

- கலா

Vlambaram - JANUARY 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-31 7:45 PM Page 20



# கணியன் பூங்குன்றனின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" – ஓர் மெய்யியல் நோக்கு



**K. ANANTHANATHAN,**
MA, MSW, RSW (Registered Social Worker with OCSWSSW)
kananthan2003@gmail.com

கணியன் பூங்குன்றனின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" - கணியன் பூங்குன்றன் - புறநானூறு:192 என்னும் உலகை ஒன்றுபடுத்தும் உன்னத சமத்துவ தத்துவக்கொள்கை எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான கணியன் பூங்குன்றனாரினால் 3500 ஆண்டுகளுக்கு முன்பே பாடப்பட்டு இருந்தாலும் இப்பாடல் எக்காலத்துக்கும் பொருந்தும் தமிழனின் உன்னத தத்துவங்கள் பொதிந்துள்ள தத்துவச் சிந்தனையாகும். இப்பாடலின் முதல் இரண்டு வரிகளையும் நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இக்கட்டுரை இப்பாடலின் 13 வரிகளிலும் பொதிந்துள்ள இந்திய தத்துவஞானத்தைச் சற்று விபரமாக ஆராய உள்ளது. இப்பாடலின் 13 வரிகளுமே இந்திய தத்துவஞானத்தின் சாராம்சத்தை கணியன் பிழிந்து தந்துள்ளார். அதாவது உலக மனித நேயத்தை/சகோதரத்துவத்தை இப்பாடலின் மூலம் கணியன் பூங்குன்றன் வலியுறுத்துகின்றார். அதாவது எமது வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைத் தருகின்ற ஒரு பாடலாக இப்பாடல் அமைந்துள்ளது. ஒருவனது வாழ்க்கைக்கு குறிக்கோள் முக்கியமானது. குறிக்கோள் இல்லாதவன் வெறும் 'சதைப்பிண்டம்'என்பதைப் 'பூட்கையில்லோன் யாக்கை போல' புறநானூறு - 69 ஆலத்தூர் கிழார் கூறுகின்றார்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன,
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றம் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது,
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.
-கணியன் பூங்குன்றன் - புறநானூறு:192


அடுத்த மிக முக்கிய புறநானூற்று 182 - கடலூர்மாய்ந்த இளம்பரிதியின் பின்வரும் பாடலையும் இத்தோடு சேர்த்துப்பார்த்தல் வேண்டும். இவ்விரண்டு பாடல்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. அதாவது சுயநலமற்ற அன்புடையவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றளவும் நிலைத்துள்ளது. இப்பாடலையும் முழுமையாகப் பார்ப்போம்.

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்,
புகழ்எனின், உயிருங் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்,
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே."

சான்றோர்கள் தேவருக்குரிய அமிழ்தமே கிடைத்தாலும் இனிது என்று தனித்து உண்ண மாட்டார். யாரோடும் வெறுப்புக் கொள்ள மாட்டார்.

பிறர் அஞ்சத்தகும் துன்பச்செயல் செய்வதற்கு அஞ்சுவர். ஒருபோதும் சோம்பியிருக்க மாட்டார். புகழ் கிடைக்குமென்றால் அதற்காக உயிரையும் கொடுப்பர்.

பழி ஏற்படும் செயலைச் செய்வதற்குப் பரிசாக உலகையே தருவதாயினும் அச்செயலைச் செய்யார். மனதில் கவலையின்றி இருப்பர்.



இத்தனை குணங்களும் பொருந்தியவராய் தம்வாழ்வின் முன்னேற்றத்தைவிடப் பிறரின் முன்னேற்றத்திற்காக முயலும் (சுயநலம்) அவர்கள் இருப்பதாலேயே இவ்வுலகம் நிலைபெற்று இருக்கின்றது. மேலும் முழு உலகமே ஒன்றே என்னும் சிந்தனையைப் பெற எமக்குப் பரந்த கல்வியறிவு வேண்டும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" - இப்பாடல்பற்றி எல்லாப் புலம்பெயர் தமிழரும் அவர்களது பிள்ளைகளும் விளங்க அறிந்திருக்க வேண்டுமென்பதால் இப்பாடலின் முழு 13 வரிகளையும் இக்கட்டுரையில் இணைத்துள்ளேன். இப்பாடல் எமக்குமட்டும் தெரிவது முக்கியமல்ல.எமது குழந்தைகளுக்கும் இதனைச் சொல்லிச் சொல்லி வளர்த்தல் வேண்டும். அப்போது அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எதிர்நோக்கும் எந்தவொரு இடர்பாடுகளையும் முகங்கொண்டு அவற்றைச் சமாளித்து வாழும் தகுதியைப் பெறுவர்.

எல்லா ஊர்களும் எமது சொந்த ஊராகும். "யாதானும் நாடாமல் ஊராமல் எவனொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" - குறள்.

உலக மக்கள் அனைவரையும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்களாக நினைத்து சேர்ந்து வாழ்தல் வேண்டும். உலகில் ஒரு குடும்பமாக வாழ்தல் வேண்டும். என்னும் கருத்தை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலின் மூலம் தமிழனின் தனித்தன்மையை உரத்துக் கூறியுள்ளார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" _ இப்பாடல் புலம்பெயர் தமிழருக்கு நல்ல வாழ்வின் ஊன்றுகோலாக அமைந்து அவர்கள் முகங்கொடுக்கும் எந்தவொரு சவாலையும் சமாளித்து அந்தந்த புலம்பெயர் நாடுகளில் சுமுகமாக ஏனைய மக்களோடு சகோதரர்களாக வாழக்கூடிய தைரியத்தையும் துணிவையும் பக்குவத்தையும் கொடுக்கும். சுருங்கக்கூறின் இத்தத்துவப்பாடலை மெய்யியல் ரீதியில் ஆழ்ந்து நோக்கினால் ஆழமான எமது வாழ்வின் நோக்கத்தையும் அர்த்தத்தையும் எமது வாழ்வின் சாராத்தையே கூறுகின்றது.
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"- உலகில் உள்ள எல்லா ஊரும் எனது ஊர்,
"தீதும் நன்றும் பிறர்தர வாரா" - எமக்கேற்படுகின்ற தீமையும் நன்மையும் அடுத்தவரால் எமக்கு வருவதில்லை, என்னும் உண்மையை உணர்ந்தால் எமது சக மனிதர்களிடம் விருப்பு வெறுப்பு இல்லாத ஒரு சமநிலை (சமத்துவம்) சார்ந்த வாழ்வு எமக்குக் கிட்டும்.
"நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன" _எமக்கு ஏற்படும் நோய்களும் துன்பங்களும் மேலே கூறியதுபோல அமைவதாகும் என்கிறார் புலவர்.

உலகிலுள்ள எல்லா மக்களும் சாதி, இன, நிற, மத வேறுபாடுகளை மறந்து எமக்கு உறவினர் என்று நினைத்து அன்பே வாழ்வின் அடிப்படை ஆதாரம் என்று வாழ்ந்தால் இந்த வாழ்வு எமக்கு எவ்வளவு இனிமையானது, சுகமானது என்கிறார் கணியன் பூங்குன்றனார்.

எமக்கேற்படும் துன்பமும் ஆறுதலும்கூட மற்றவர் தருவதில்லை. எமது மனம் இவ்வாறு பக்குவப்பட்டால் அமைதி அங்கேயே கிட்டும்.

"சாதல் புதுமையில்லை" - மரணம்கூட எமக்குப் புதியதல்ல என்கிறார்.

"வாழ்தல் இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின் இன்னா தென்றலும் இலமே." இந்த வாழ்க்கையில் எது, எவர்க்கு, எப்போது, என்ன நடக்கும் என்று எவருக்கும் தெரியாது. இந்த வாழ்க்கை மிகவும் நிலையற்றது (நிலையாமை).

வள்ளுவர் திருக்குறளில்;
"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" (குறள் 339)
ஒருவன் செயலில்லாமல் தூங்குவதைப் போன்றது இறப்பு, அவன் மீண்டும் உறக்கத்திலிருந்து விழித்துக்கொள்வது போன்றது பிறப்பு. என்றும்
"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு (குறள் 336)
நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம் என்கிறது. கூறுகின்றார்.

அதனால், இன்பம் வந்தால் மிக்க மகிழ்வதும் வேண்டாம் (இவ்விடத்தில் விபுலானந்தரின் "கங்கையில் விடுத்த ஓலை" கவிதை அடிகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.

"இன்பவிளையாட்டினிடமே மேலெழுந்து குதிப்பார்_துன்பம் வந்தால் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம்." (வெறுத்தின்னா) ஒரு மனிதனுக்குப் பிறந்தநாள் ஒன்று உண்டெனில் இறக்கும் நாளும் ஒன்று உண்டு. இறப்பு புதியதல்ல. இது இயற்கையானது. ஆகவே வாழ்வை இயல்பாய் வாழ்தல் வேண்டும் என்கிறார். மரணம் எல்லோருக்கும் பொதுவானது. இந்த உண்மையை உணர்ந்தும், எமக்குள் உள்வாங்கியும் வாழ்ந்தால் நாம் எதற்கும் அஞ்சாமல் எமது வாழ்க்கையை நாம் வாழும்வரை இரசிக்கலாம் என்கிறார் புலவர் கணியன் பூங்குன்றனார். ஆகவே எமது வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம்.

இதற்கான நல்ல உதாரணத்தைப் பின்வரும் 7 வரிகளில் தருகின்றார்.
"மின்னொடு வானம் தண்துளி தலைஇ" - இந்த வானம் நெருப்பாய் மின்னலையும் தருகிறது. நாம் வளமாக வாழ மழையையும் தருகிறது. இயற்கையின் போக்கின்படி உயிரின் தன்மையின்படி வழியில் அது, அதனதன் பணியைச் செய்கிறது. காட்டாறு ஆற்று வெள்ளத்தில் கற்களோடு அடித்து முட்டிமோதிச் செல்லும் படகுபோல எமது வாழ்க்கையும் சங்கடங்களில் மாட்டி அவரவர் ஊழ்வினைப்படி (விதிப்படி) அடிபட்டுப் போய்க்கொண்டு இருக்கும். இது எமது வாழ்வின் இயல்பு என "ஆருயிர் வழிப்படூஉம்" என்னும் வரியின் மூலம் விளக்குகின்றார். மனத்தெளிவு கொள்ளல் வேண்டும். "ஆதலின் மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" இந்தத் தெளிவுபெற்றால் வாழ்வில் பெரிய நிலையில் உள்ள பெரியவர்களைப்பார்த்து மிகவும் வியந்து பாராட்டவும் வேண்டாம். வாழ்வில் தாழ்நிலையடைந்து சிறிய நிலையில் உள்ள சிறியவர்களைப்பார்த்து அவர்களை ஏளனம்/கேலி செய்து தாழ்வாக இகழ்வதும் வேண்டாம். அவரவர் அவரவர்க்கு அவரவர் பெரியவர்கள் என்னும் அடிப்படை உண்மையை கணியன் கூறுகின்றார். இதைவிட வேறு எவரால் எமது வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை மற்றும் உண்மையையும் வாழ்வியல் விழுமியங்களையும் தெளிவாக சொல்லித்தரமுடியும்? எனவே உலக வாழ்வில் எமது வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள் கொண்டு இன்பமாகக் கழிப்போம்.

கணியன் என்பவன் யார்? கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் அறிந்து காலத்தைக் கணித்துச் சொல்லக்கூடிய முக்காலமும் உணர்ந்தவர்களை அழைப்பர். இதனாலேயே பூங்குன்றனை கணியன் என்று அழைத்தனர். கவியரசு கண்ணதாசனும் இதனையே கூறி இவர்களை காலக் கணிதர்கள் என்று தனது கவிதையில் கூறினார். இத்தொழில் அல்லது இக்குலத்தில் பிறந்தவர்களைத் தான் கணியன் என்று அழைப்பர். இவர் பூங்குன்றம் என்ற சின்னக் கிராமத்தில் பிறந்தபடியால் கணியன் பூங்குன்றன் என்று அழைக்கப்பட்டார்.

குறிப்பாக கர்மா, அன்பு, மனித நேயம், உலக சகோதரத்துவம், வாழ்வின் நிலையாமை, எம் வாழ்வின் நோக்கம், இலட்சியம் என்ன? போன்ற வாழ்வின் அடிப்படைக் கருத்துகளை தந்துள்ளார்.